# சம்மாந்துறை பிரதேச சபையின் 04வது சபையின் 29வது கூட்டறிக்கை 2020.07.07

சம்மாந்துறை பிரதேச சபையின் 04வது சபையின் 29வது அமர்வு 2020.07.07 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 9.30 மணிக்கு சம்மாந்துறை பிரதேச சபையின் சபா மண்டபத்தில் தேசிய கீதம் மற்றும் இறை சிந்தனையுடன் கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட் அவர்களின் தலைமையில் ஆரம்பமானது.

## சமூகமளித்த கௌரவ உறுப்பினர்கள்

| | | |
|---|---|---|
| 01. ஜனாப்.ஏ.எம்.எம். நௌசாட் | கௌரவ தவிசாளர் | அ.இ.ம.கா |
| 02. ஜனாப்.ஏ.அச்சி முஹம்மட் | கௌரவ உப தவிசாளர் | ஸ்ரீ.சு.க |
| 03. ஜனாப்.ஐ.எல்.நஜீம் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 04. ஜனாப்.எஸ்.எம்.எம்.முஸ்தபா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 05. திருமதி.ஆர்.வளர்மதி | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |
| 06. திரு.என்.கோவிந்த சாமி | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 07. ஜனாப்.ஏ.சி.முஹம்மட் சஹீல் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 08. ஜனாப்.எம்.ரீ.பௌசுள்ளாஹ் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 09. ஜனாப்.ஏ.எம்.எம்.றியாஸ் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 10. ஜனாப்.ஏ.எல்.எம்.ஜிப்ரி | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 11. ஜனாப்.எஸ்.நளீம் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 12. ஜனாப்.ஏ.யூசுப் லெவ்வை | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 13. திருமதி.கே.எம்.இன்பவதி | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 14. திருமதி.எம்.எஸ்.சரீபா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 15. திருமதி.எஸ்.எம்.சித்தி நிலுவ்பா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 16. திருமதி.கே.எல்.சிஹாமா | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 17. ஜனாப்.வை.பீ.எம்.முஸம்மில் | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |

## சமூகமளிக்காத கௌரவ உறுப்பினர்கள்

| | | |
|---|---|---|
| 01. திரு.வீ.ஜெயச்சந்திரன் | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |
| 02. ஜனாப்.யூ.எல்.அஸ்வர் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 03. ஜனாப்.ஐ.எல்.எம்.மாஹிர் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |

## சமூகமளித்த உத்தியோகத்தர்கள்

| | |
|---|---|
| 01. ஜனாப்.எம்.ஏ.கே.முஹம்மட் | செயலாளர் |
| 02. செல்வி.ஏ.பீ.ஏ.ஸஹானா | அலுவலக உதவியாளர் |

## கௌரவ தவிசாளர் ஏ.எம்.எம். நௌசாட்

பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ராஹீம். எல்லாப்புகழும் இறைவனுக்கே, எல்லோரையும் 04வது சபையின் 29வது அமர்வுக்கு வரவேற்றவனாக, துரதிஸ்டவசமாக எல்லா நவீன வசதிகள் செய்தும் அதனை தயார்படுத்தி செயற்படுத்த முடியாத நிலையில்தான் நாம் இருக்கின்றோம்.

இவ் அமர்வின் முதல் அம்சமாக கடந்த கூட்டறிக்கையை சமர்ப்பிக்கின்றேன். இதில் சபையின் கௌரவத்தை பேணுவதற்காக சில விடயங்கள் அழிக்கப்பட்டுள்ளது. இதில் சில வார்த்தைகளைத் தவிர்த்து இயலுமானவரை ஒழுங்காக அமைக்கப்பட்டுள்ளது. சென்ற அமர்வில் கூட துரதிஸ்டவசமாக நான் பேசியவை சில கூட்டறிக்கையில் வருவதற்கு Record ஆகவில்லை. ஆனால் சாராம்சங்கள் இதில் வந்திருக்கின்றது. வேறு ஏதாவது விடப்பட்டு இருந்தால் அதை நீங்கள் சுட்டிக்காட்டினால் திருத்தங்களை செய்யலாம். அல் - அர்ஷத் பாடசாலையைப் பற்றி கதைத்தவை எல்லாம் அதற்குள் வரவில்லை அதற்கு காரணம் Record இல்லாமல் போனது. இதில் மாற்றங்கள் இல்லாவிட்டால் ஒருவர் ஆமோதிக்கலாம்.

**தீர்மானம் - 04/29/01**

சென்ற மாதக் கூட்டறிக்கை கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.ரீ.பௌசுள்ளாஹ் |

கூட்டறிக்கை சபையில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

சௌபாக்கியா திட்டத்தின் கீழ் அரச காணி ஏறத்தாள 6 ½ ஏக்கர் நாம் கேட்டிருந்தோம். ஆனால் அரசாங்க அதிபர் அவர்கள் என்னை அழைத்து அதற்கு ஒரு விளக்கம் தந்தார். அவரின் கூற்றுப்படி அரச காணிகளை அரச ஸ்தாபனங்கள் பாவித்து இலாபம் பெற முடியாது. சனசமூக நிலையங்கள் மூலமாக இந்த Proposal களை சமர்ப்பியுங்கள் என்றார். தற்போது இதற்கு காலமில்லை என்று கூறி, நமது காணிகளில் செய்வதாக கூறினேன்.

தற்போது அச் செயற்திட்டத்தை சென்னல் கிராம சந்தை, சென்னல் கிராம சனசமூக நிலையம், எலும்பு அரைக்கும் ஆலை, Garment Factory என்பவற்றில் உப தவிசாளரின் பொறுப்பில் அத் திட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அதே நேரம் சபையினால் எனது அனுமதியில் அரச காணியில் உழவப்பட்ட பணத்தை சபைக்கு மீள அளிக்கப்படும். இல்லாவிட்டால் ஒரு காலத்தில் சபையின் பணத்தை பாவித்து அதை நடைமுறைப்படுத்தவில்லை என்று ஒரு கேள்வி வரலாம்.

நீங்கள் எல்லோரும் அனுமதி தந்து கடன் பெற்ற, Digital Board தற்போது இங்கு அமைக்கப்பட்டுள்ளது. இன்ஷா அல்லாஹ் இன்று அல்லது நாளைக்கு தொழிற்படும். தேர்தல் காலங்களில் தேர்தல் பிரச்சாரத்துக்காக இவைகள் பாவிக்கக் கூடாது என்று தேர்தல் ஆணையாளர் ஒரு சுற்று நிரூபம் அனுப்பி இருக்கின்றார். இந்த முடிவுக்கு எதிராக சிலர் Court இற்கு சென்று பிரச்சினை என்ன என்று கேட்காமலே Dismiss செய்துவிட்டது. அதனால் அரசியல் பிரச்சாரங்களுக்கு பாவிக்க முடியாது. இதில் முக்கியமானது என்னவென்றால் மக்களுக்கு சொல்ல வேண்டிய செய்திகள், COVID – 19, பொதுச் சுகாதாரம், திண்மக் கழிவு, Central Environment Authority இல் பொலித்தீன் பாவனை, எமது முச்சபைகள், கோயில் நிர்வாகங்கள் மக்களுக்கு சொல்ல வேண்டிய செய்திகள் எல்லாவற்றையும் மக்களுக்கு கொண்டு செல்வதற்கு நமக்கு உதவியாக இருக்கும். நாம் முதல் கணித்தது 4 மில்லியன் தேவைப்படும் என்று, அதன் பின்னர் ஆகக்குறைந்த தொகையாக 3 மில்லியன் 25000 இற்கு Quotation எடுத்தோம். அதனால் LLDF இடம் இருந்து எடுக்கின்ற கடன் 2.4 மில்லியன் எடுத்தோம். எஞ்சியதை சபையினால் செய்கின்றோம். எமக்கு மீண்டும் கட்டுகின்ற சுமையும் குறையும், காலமும் குறையும்.

06 ஆம் மாதம் வரை நமக்கு வந்திருக்கும் வருமானங்கள் மொத்தமாக மதிப்பீடு செய்த வருமானத்தில் 30% வீதமான வருமானத்தை நாம் அடைந்துள்ளோம். வரி 18% அறவிட்டுள்ளோம். Rent 21% செய்திருக்கின்றோம். Licence Fees 32%. ஆனால் சந்தோசமான செய்தி என்னவென்றால் முத்திரைப்பணம் 77% ஆகும். நாம் 14 மில்லியன் Budget தயாரித்தோம். அதில் 10.7 மில்லியன் வந்து சேர்ந்துவிட்டது. இன்னும் 27% வரவேண்டியுள்ளது. வருட இறுதியில் வரும் என்ற நம்பிக்கை இருக்கின்றது. Courts Fine 57% வந்து சேர்ந்து விட்டது. இவைகளை வைத்து நாம் தைரியமாக அடுத்த 06 மாதமும் பயணிக்கலாம். ஏனைய சபைகளுக்கு இருக்கும் நிதிப் பிரச்சினை நமக்கு இருக்காது. நான் சென்ற மாதம் Finance Commission இற்கு சென்றிருந்தேன். Finance Commission என்பது 13வது திருத்தச் சட்டத்தின் கீழ் மத்திய அரசின் நிதிகள் மாகாண சபைகளுக்கும், உள்ளூராட்சி சபைகளுக்கும் அவர்களின் தேவைகளை பூர்த்தி செய்யக்கூடிய அளவுக்கு வழங்கப்படுவதையிட்டு கண்காணிக்கும் ஒரு Commission. துரதிஸ்டவசமாக மாகாண சபைகளுக்கும் அதன் மூலமாக உள்ளூர் சபைகளுக்கும் தேவையான நிதிகள் ஒதுக்கீடு செய்வதில் பாரிய பிரச்சினைகள் இருக்கின்றது.

உதாரணமாக அபிவிருத்திக்கு என்று எமக்கு வருடத்திற்கு சிலநேரம் 1 மில்லியன், 2 மில்லியன் மாகாண சபையில் இருந்து வருகின்றது. மத்திய அரசின் திட்டங்கள் எல்லாம் மத்திய அரசினால் நேரடியாக செய்யப்படுவதனால் உள்ளூராட்சி சபைகள் புறக்கணிக்கப்படுகின்றன என்றும், 2010 ஆம் ஆண்டு அரசு ஒவ்வொரு சபைக்கும் ஒவ்வொரு மாதமும், மாதாந்த செலவுக்காக ஒரு மில்லியன் தந்ததனால் எமது நடைமுறைச் செலவுகளை ஒரு தொகை பணத்தை சேமிக்க கூடியதாக இருந்தது. தற்போது சபையில் எது செய்தாலும் சபை வருமானத்தில் வருவதைத்தான் பாவிக்க வேண்டும். அதை இறுக்கமாக உங்களது எல்லோரினது எதிர்ப்புக்கு மத்தியிலும், நிதி நிர்வாகம் இறுக்கமாக இருப்பதனால் நமது சபைக்கு அந்தப் பிரச்சினை இல்லை.

இது தேர்தல் காலம் என்றபடியினால் நமக்கு எந்த அபிவிருத்தி வேலைகளோ மற்றும் சமூக வலுவூட்டல் வேலைகளோ செய்ய முடியாத காலம். ஆனால் நீங்கள் தற்போதே உங்கள் திட்டங்களை தயார்படுத்துவீர்களானால் இன்ஷா அல்லாஹ் அடுத்த மாத இறுதியளவில் அந்த அங்கத்தவர்களுக்கான வலுவூட்டல் நிதியை ஒவ்வொரு அங்கத்தவர்களுக்கும் பாவனைக்கு வழங்கக்கூடிய சந்தர்ப்பம் இருக்கும். அதனால் நீங்கள் என்ன செய்யப்போகின்றீர்கள், அதற்கு தேவைப்படும் பொருட்களோ, சேவைகளோ என்ன என்று இந்த மாத இறுதிக்கு முதல் தந்து உதவினால் நாம் அதை தயார்படுத்தி தேர்தல் காலம் முடிந்ததும் அதை செயற்படுத்தக் கூடியதாக இருக்கும்.

I Road Project ஆரம்பித்து வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றது. அதில் ஏதாவது குறைபாடுகள் இருக்குமானால் உடனடியாக எழுத்து மூலம் சபைக்கு அறிவித்தால் நாம் அவர்களோடு தொடர்பு கொண்டு செய்யக்கூடிய மாற்றங்களை செய்யலாம். அவர்களும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் வழிகாட்டலுக்குள் செய்யக்கூடியவை எல்லாவற்றையும் செய்வதாக உறுதி அளித்து இருக்கின்றார்கள், செய்கின்றார்கள். அவர்கள் செய்து முடித்த வேலைகளை சென்று பார்த்தால் உங்களுக்கு விளங்கும் வித்தியாசமாக அது செயற்படுத்தப்பட்டிருக்கின்றது. அது இந்த ஊருக்கு ஒரு வரப்பிரதாசமாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

அரசாங்கம் ஒரு இலட்சம் கிலோ மீற்றர் (100,000Km) பாதைகள் செய்வதில் நீங்கள் எல்லோரும் தந்த விபரங்களை அவர்களுக்கு அனுப்பி நேற்றும், இன்றும் அதை அவர்கள் கணிப்பீடு செய்து போகின்றார்கள். அதற்கு ஒரு Marks System ஒன்று இருக்கின்றது. அதில் பதிந்து செல்கின்றார்கள். 10 பாதைகள் செய்யப்படலாம் என்ற நம்பிக்கை இருக்கின்றது. ஆனால் அதிலும் சில காபட், சில கொங்றீட். ஏனென்றால் ஈரலிப்பு இருக்கின்ற பாதைகளை காபட் பண்ணுவதில் பிரயோசனம் இல்லை. ஆனால் கொங்றீட் பாதையை காபட் பண்ணுவது என்பது மிகவும் திறமையான விடயம் காபட் பழுதாகாது. இந்த மாதக் கடைசியில் முடிவு எடுப்பார்கள் என்று நினைக்கின்றேன்.

இது தேர்தல் காலம். இந்த தேர்தல் காலத்தில் நாம் எல்லோரும் நமது தனித்தனி முடிவுகளை எடுத்து செயற்படும் காலம். இக் காலத்தில் நான் உங்களுக்கு கூறும் புத்திமதி, தயவு செய்து நீங்கள் இந்த சபையின் கௌரவ உறுப்பினர்கள் என்ற விடயத்தை நீங்கள் மறக்கக்கூடாது. இந்த சபையின் கௌரவத்தை பேணி நாம் பொது மேடைகளில் கூறும் கருத்துகளை பக்குவமாக சொல்வதனால் நாம் மற்றவர்களுக்கு முன்னுதாரணமாக இருக்கலாம். இதை ஏன் கூறுகின்றேன் என்றால் சிலர் எம்மை தூண்டுவார்கள். நான் உங்களுக்கு வயதிற்கு மூத்தவன் என்ற ரீதியிலும், இன்று பொது வாழ்க்கையில் ஆகக் கூட அனுபவம் உள்ளவனுமாக இருப்பதனால் எனது கடமை. நமக்கு நாளைக்கு நடக்கப் போவது என்பது எமது கையில் இல்லை. யாரிடம் யாரை இறைவன் அனுப்புவான் என்று எமக்கு உறுதியாக கூற முடியாது. அதனால் இன்று பலர் அவதிப்படுகின்றார்கள். அந்த மேடைகளில், பிரசுரங்களில் கூறிய எல்லாவற்றையும் திருப்பி விழுங்கக்கூடிய நிலவரமும் கூட சிலருக்கு உருவாகின்றது. இது உங்கள் பொது வாழ்க்கையில் இருக்கும் எல்லோருக்கும் ஒரு பாடம்.

உங்களின் கருத்துகளை கூறுங்கள் அதில் நியாயப்படுத்துங்கள், அதில் எவரும் குறைகூற முடியாது. ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட கருத்துகள் இருக்கலாம். எல்லோரும் ஒரு கருத்தோடு

இருக்க வேண்டும் என்றால் இராணுவ ஆட்சிதான் இருக்கலாம். இல்லாவிட்டால் சர்வதிகார ஆட்சிதான் இருக்கலாம். ஆனால் இங்கு ஜனனாயக ஆட்சிதான் அதுவும். இச் சபையில் அப் பிரச்சினையே இல்லை. எந்தக் கட்சியிலும் இருக்கலாம். ஆனால் சபையின் கௌரவத்தை பேணுங்கள். நீங்கள் ஒரு முன்மாதிரியாக இருக்க வேண்டும் என்றுதான் கூறுகின்றேன். அது எனக்கும் இச் சபைக்கும் பெருமையைத் தேடித்தரும். இன்று மக்கள் முடிவுகள் எடுப்பதற்கு ஆக்கபூர்வமான கருத்துகளை கூறி நமது சபையின் கௌரவத்தை பேண வேண்டும் என்று கூறி,

கௌரவ உறுப்பினர்கள் எல்லோரும் கௌரவ உறுப்பினர் சிஹாமா அவர்கள் அடிக்கடி சொல்வது போல் சபை நடவடிக்கைகளுக்கு மேலாக தங்களின் ஆக்கபூர்வமான சிந்தனைகள், முயற்சிகள் மூலம் சமூக வேலைகளில் அக்கரை காட்ட வேண்டும், செயற்பட வேண்டும் என்று. அந்த சிந்தனை நீங்கள் பொது வாழ்க்கையில் இருப்பதானால் வரவேண்டும். எமது கௌரவ உறுப்பினர் றியாஸ் அவர்கள் சென்ற இரண்டு கிழமைக்கு முன் 02 LED மின்குமிழ் அவரின் செலவில் கொள்வனவு செய்து பூட்டினார். தற்போது அப் பிரதேசம் இரவு வேளைகளில் வெளிச்சமாக இருக்கின்றது. நூலகங்களுக்கு சில புத்தகங்களை கொள்வனவு செய்து தந்தார். நூலகங்கள் கண்கானிப்பில் நான் உங்களின் உதவியை நாடுகின்றேன். நீங்கள் விளங்க வேண்டும் இதில் இருப்பவர்கள் எல்லாம் அரச உத்தியோகத்தர்கள். அவர்கள் காலத்திற்கு காலம் இடம் மாறுபவர்கள். அதில் எமது 4 வருட காலத்துக்குள்ளாவது நாம் அதை கண்காணித்து அதை ஒரு வகையில் ஊக்குவிப்போமானால் நிச்சயமாக அது ஒரு வரப்பிரதாசமாக மாறும்.

அமீர் அலி வாசிப்பு பிரிவை பார்த்தால் அது எவ்வளவு காலத்திற்கு பிறகு அது ஒரு வித்தியாசமான தோற்றமாக செய்யப்பட்டுள்ளது. அதே போல் சிறுவர் பிரிவு, Reading reference section நமக்கு சபைதான் செய்ய வேண்டும் என்று இல்லை. உங்களுக்கு தெரிந்த நலன் விரும்பிகள், கொடைவள்ளல்கள் இருந்தால் அவர்களின் பெயர்களின் ஒவ்வொரு பிரிவை செய்து நாம் அதை செய்யலாம். உண்மையாக அந்த நூலகத்திற்கு இடம் போதாது. இன்னும் ஒரு துண்டு தேவைப்படுகின்றது. வேறு ஏதாவது திட்டங்களில் நமக்கு பண உதவி கிடைக்குமானால் நிச்சயமாக அமீர் அலி நூலகம் பெருப்பிக்கப்பட வேண்டும். அதே நேரம் நான் மீண்டும் மீண்டும் கூறுவது நமது முஹல்லா மஹல்லா மையவாடியின் வட புரத்தில் பாரிய ஒரு Study Research Centre என்ற ரீதியில் அவ்விடத்தில் உருவாக்க வேண்டும். ஏனென்றால் ஒரு அமைதியான இடம். எதிர்வரும் காலங்களில் ஊரின் மையமாக மாறக்கூடிய ஒரு இடம். அதை நாம் நிலைநாட்ட வேண்டியது இந்த சபையின் பொறுப்பு. இயலுமான அளவு அப் பிரதேசத்தை நிரந்தரமாக அபிவிருத்தி செய்து எவரும் கையடிக்க கூடிய நிலையில் வைக்கக் கூடாது. உங்களுக்கு தெரியும் அதில் பல சர்ச்சைகள் இருக்கின்றது. ஆனால் அவைகளை அபிவிருத்தி மூலம்தான் அதை வெல்லலாம். அந்த முயற்சியும் நாம் எடுக்க வேண்டும் என்று கேட்டு,

செலவீனங்களை அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கின்றேன். அதில் ஏதாவது கேள்விகள் இருப்பின் அதனை கேட்கலாம்.

**கௌரவ உறுப்பினர் கே.எம்.இன்பவதி அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, வெளிப்புறத்திட்டமிடலின் கீழ் மல்லிகைத் தீவு கிராமத்திற்கான குடி நீர் விநியோகத்திற்காக செலுத்தப்பட்ட முற்பணம் ரூபா 10060.20 என்றும், நலன்புரி சேவைக்கு கீழ் மல்லிகை தீவு சந்தைப் பகுதிக்கு நீர் பெறுவதற்காக நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபைக்குச் செலுத்தப்பட்ட முற்பணம் 10060.20 என்றும் இரண்டு தடவை வந்துள்ளது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அது மல்லிகை தீவு சந்தைப் பகுதி அல்ல, வளத்தாப்பிட்டி சந்தைப்பகுதி என்று வர வேண்டும்.

**தீர்மானம் - 04/29/02**
சென்ற மாதம் 2020.06.01 தொடக்கம் 2020.06.30 வரையிலான செலவீனங்களும் மற்றும் கொடுப்பனவுகளுக்குமான செலவு விபரங்களுக்கு அனுமதி வழங்குவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | என்.கோவிந்தசாமி |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாக அனுமதிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

LDSP செயற்திட்டம் செயற்படுத்தப்படவிருப்பதால் சபையினால் சபையினால் மேற்கொள்ளப்படும் திட்டங்களுக்குரிய பெறுகைச் சபை மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக்குழு என்பவற்றினை தாபிப்பதற்கான சபையின் தீர்மானம், பெறுகைச் சபை 7 பேர் கௌரவ தவிசாளர், ACLG/CLG பிரதிநிதி ஒருவர், சபையில் தாபிக்கப்பட்ட ஆலோசனைக்குழுக்களின் தலைவர்கள் அல்லது மக்களால் தெரிவு செய்யப்பட்ட சபை உறுப்பினர்கள் 03 பேர் இதில் இவ் வேலைகளில் நேரடியாக ஆர்வம் காட்டி அதில் செயற்படுத்தக்கூடிய அங்கத்தவர்கள் முன்வரவேண்டும். இல்லாவிட்டால் அதை செய்து முடிக்க இயலாது. எமது Lift இனை செய்வதற்கு 4 மில்லியன் வேண்டும். 2மில்லியன் இருக்கின்றது. சபை தீர்மானித்தால் மீதிப் பணம் இவ்வருடத்திற்குள் வரும் என்ற உறுதிமொழி இருக்கின்றது. இதை செய்து முடிப்போமானால் Performance இல் முன்னிலையில் இருப்போம். இதற்கு சபை அங்கீகாரம் தேவை.

## தீர்மானம் - 04/29/03

LDSP செயற்றிட்டம் செயற்படுத்தப்படவிருப்பதால், சபையினால் மேற்கொள்ளப்படும் திட்டங்களுக்குரிய பெறுகைச் சபை, மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக்குழு என்பவற்றினை தாபிப்பதற்கான பிரேரணை.

**பெறுகைச் சபை: 07 பேர்**

- I. கௌரவ தவிசாளர் - தலைவர்
- II. ACLG/CLG இன் பிரதிநிதி – உறுப்பினர்
- III. சபையில் தாபிக்கப்பட்ட ஆலோசனைக் குழுக்களின் தலைவர்கள் அல்லது மக்களால் தெரிவு செய்யப்பட்ட சபை உறுப்பினர்கள் 03 பேர் - உறுப்பினர்கள் (கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட், கௌரவ உறுப்பினர் என்.கோவிந்தசாமி, கௌரவ உறுப்பினர் ஆர்.வளர்மதி)
- IV. சபையின் செயலாளர் - உறுப்பினர்
- V. உள்ளூராட்சி உதவியாளர் (விடய உத்தியோகத்தர்) – உறுப்பினர் (திரு.S.கருணாகரன்)

**தொழில்நுட்ப மதிப்பீட்டுக்குழு: 03 பேர்**

- I. மாவட்ட LDSP செயற்றிட்ட பொறியியலாளர் - தலைவர்
- II. பிரதேச சபையின் திட்டத்திற்குரிய TO - உறுப்பினர் (ஜனாப். ஏ.ஏ.றசாக்)
- III. வேறு திணைக்களத்தின் TO - உறுப்பினர் (ஜனாப்.எச்.எம்.ஹில்மி TO, . . வலயக்கல்வி அலுவலகம், சம்மாந்துறை)

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ்.நளீம் |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

சிறுவர் பூங்காக்களை திறப்பது தொடர்பாக நீங்கள் எல்லோரும் ஆழமாக உங்களது கருத்துக்களை கூற வேண்டும். எல்லோரும் வந்து அங்கு திறந்து விட்டார்கள், இங்கு திறந்து விட்டார்கள் இதனை எப்போது திறப்பது என்று கேட்கின்றார்கள். ஆனால் நாம் நாட்டின் நிலமை, மக்களின் நிலமை எல்லாவற்றையும் பார்த்துதான் செய்யவேண்டும். இச் சந்தர்ப்பத்தில் பிள்ளைகளுடன் செல்கின்ற பெரியோர்களை கட்டுப்படுத்துவதற்கு ஏனைய சபைகள் அறவிடுவது போல் நாமும் சிறு அறவீடு செய்தால் என்ன என்ற ஒரு முன்மொழிவு. இது தொடர்பாக உங்களது கருத்துக்களை கூறலாம்.

**கௌரவ உறுப்பினர் எஸ். நளீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, சிறுவர் பூங்காவிற்கு கட்டணம் அறவிடுவதில் உடன்பாடு இல்லை. ஏனென்றால் இன்று அமைக்கப்பட்டிருக்கின்ற சிறுவர் பூங்காக்களின் பௌதீக வளத்தை எதிர்நோக்குகின்ற போதும், ஏனைய இடங்களில் இருக்கின்ற சிறுவர் பூங்காக்களிலே பொருத்தப்பட்டிருக்கின்ற நவீனமயப்படுத்தப்பட்ட பொருட்களுக்கும் நிறைய வித்தியாசம் இருக்கின்றது. ஆகவே மிகவும் பின்தங்கிய பிரதேசங்களிலேதான் இந்த சிறுவர் பூங்காக்கள் பொருத்தப்பட்டிருக்கின்றது. எமது ஊரின் மிக எல்லைக் கிராமங்களிலே தான் இந்த சிறுவர் பூங்காக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றது. சிறுவர் பூங்காக்கள் அமைக்கப்பட்டதன் நோக்கம் உண்மையாக உதாரணமாக சென்னல் கிராமத்திலையோ அல்லது கல்லரிச்சலிலையோ கைகாட்டிப் பிரதேசத்தில் இருக்கின்ற சிறுவர்கள் இந்த விளையாட்டு உபகரணங்களை கண்டுகழிப்பதற்காக அமீர் அலி சிறுவர் பூங்காவிற்கு வருகின்ற போது அவர்கள் முச்சக்கரவண்டிக்கும் பணம் செலுத்திதான் வரவேண்டிய சூழ்நிலையிலே இருக்கின்றது.

எனவே இவ்வாறான அவல நிலையில் இருந்து அந்த சிறுவர்களை பாதுகாக்க வேண்டும் என்பதற்காகத்தான் இந்த சிறுவர் பூங்காக்களை ஊரின் எல்லைப் பிரதேசங்களில் அமைக்க வேண்டும் என்ற முயற்சியின் கீழ் அது ஒரு என்னைப் பொருத்தவரைக்கும் நன் நோக்கத்தோடு அமைக்கப்பட்ட ஒரு விடயம். ஆகவே நாங்கள் இதற்கு கட்டணம் அறவிடுவதாக இந்த சபையிலே தீர்மானமாக எடுத்தால் எதற்காக தீர்மானம் எடுக்கப்பட்டிருக்கின்றது என்பதை யோசிப்பதை விட இந்த சபைக்கும் கௌரவ தவிசாளருக்கும், கௌரவ உறுப்பினர்களுக்கும் ஒரு அபகீர்த்தியை ஏற்படுத்தக்கூடிய நிலையாக மாறிவிடும். எங்களுடைய பார்வையில் 20 ரூபா சாதாரணமான பணமாக யோசிக்கின்றோம். ஆனால் அதனுடைய கருத்து வேறுபாடுகளின் விளைவு பாரிய ஒரு தாக்கத்தை இச் சபைக்கு ஏற்படுத்தலாம் என்ற அச்சம் எனக்கு இருக்கின்றது. எனவே இது சம்மந்தமாக என்னைவிட இச் சபையிலே அனுபவம் கூடிய கௌரவ உறுப்பினர்கள் இருக்கின்றீர்கள். பொது வாழ்க்கையில் அனுபவம் கூடிய உறுப்பினர்கள் இருக்கின்றீர்கள். இதனை சற்று ஆலோசனை செய்து இதற்கான தீர்மானத்தை எடுத்தால் நல்லது என்று கூறி விடைபெறுகின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இவ் விடயத்தில் எமது சிறுவர் பூங்காவை ஏனைய பூங்காக்களுடன் ஒப்பிடுவது என்னைப் பொருத்தமட்டில் பொருத்தமில்லை. நாம் இவ்வளவு பெரிய ஊராக இருந்தும் ஒரு பூங்கா கூட இல்லாமல் இருந்து ஆரம்பித்து ஏதோ ஒரு முயற்சியினால் அமீர் அலி பூங்கா செய்யப்பட்டது. அதன் பின் எவ்வளவோ விமர்சனத்திற்கு மத்தியில் கைகாட்டி சிறுவர் பூங்கா இன்று கூட அதை விளங்காதவர்கள் இருக்கின்றார்கள். குளத்தை மூடுகின்றார்கள் என்றுதான் சொல்லுகிறார்களே தவிர இதை ஏன் செய்கின்றார்கள், இதன் தூரநோக்கு என்ன என்பது இல்லை. ஆனால் இன்றைக்கு அவ்விடத்தில் செய்யப்பட்டிருக்கின்ற பாதுகாப்பு, அதனால் வந்த விளைவுகள் அதைப் பற்றி பேசுவதற்கு மக்கள் இல்லை. ஆனால் நமக்கு ஒரு கட்டுப்பாடு வேண்டும். எல்லாவற்றையும் இலவசமாக கொடுத்தால் எல்லோருக்கும் விருப்பம். கட்டணம் அறவிடுவது சுமையை போடுவதற்கு இல்லை. எந்த வழியில் அவர்களுக்கு நீர்வழங்கல் சபையோ அல்லது வேறு எந்த சபையோ எதுவும் சும்மா இல்லையே. இதன் பின்னனி என்னவென்றால் சபையின் பணத்தை பாவித்து அல்லது சபையின் நிதிகள் மூலம் பராமரிக்க சிறுவர் பூங்கா என்பது முதலீடு ஒன்று அடுத்தது பராமரிப்பு. தற்போது அவ்விடத்தில் நிரந்தரமாக ஒரு தொழிலாளியை வைத்து அவ்விடத்தில் நீரிணைப்பு செய்து, இது ஒரு பராமரிப்பு செலவு அதைப்பற்றி நாம் யோசிக்கின்றோம் இல்லை. இது பெரிகிப் பெரிகிப் போக அதை பதிலீடு செய்வதற்கு ஏதாவது சிறு தொகைகள் வந்தால்தான் அதை நியாயப்படுத்தலாம். 20 ரூபா கொடுத்து பிள்ளையை சிறுவர் பூங்காவிற்கு பிள்ளைகளுக்கு கட்டணம் இல்லை. பெரியோர்கள் உள் நுழைந்தால்தான் கட்டணம் 12 வயதிற்கு மேற்பட்டவர்கள் பூங்காவிற்குள் சென்றால் கட்டணம் செலுத்த வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் எம்.எஸ். சரீபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கட்டணம் என்பது பிள்ளைகளுக்கு இல்லை என்பதை விளங்காத பட்சத்தில் அது கூறப்பட்டதோ தெரியாது. ஒரு 20 ரூபா கட்டணம் அறவிடப்படுகின்றது என்றால்

அப் பூங்காவிற்கு செல்பவர்களுக்கு ஒரு கவனம் இருக்கும். இது சிறிய தொகையும் கொடுக்க வேண்டும். அடிக்கடி உள் நுழைந்து சேதப்படுத்தக் கூடாது என்று, மற்றயது என்னவென்றால் அதனால் வருகின்ற 20 ரூபாவை அறவிட்டு இன்னும் அப் பூங்காவிற்கு தேவையான தளபாட வசதிகளையும் வாங்கிப் போடுவதற்கு ஏதுவாக இருக்கும் என்று நினைக்கின்றேன். அக் கட்டணத்தை பெரிதுபடுத்தாமல் அறவிடுவதில் குற்றமில்லை என்பதுதான் எனது அபிப்பிராயம்.

**கௌரவ உறுப்பினர் கே.எல்.சிஹாமா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கௌரவ உறுப்பினர்களின் கருத்துக்களை உள்வாங்கியவளாக, இக் காலகட்டத்தில் இதில் போடுபட்டது ஏன் என்று விளங்கிக் கொண்டேன். அதாவது இக் காலகட்டத்தில் ஒரு குறிப்பிட்ட தொகை அவர்களிடம் இருந்து பெற்றுக்கொண்டால் எங்களுடைய மக்களை குறிப்பிட்ட அளவுக்கு உள்வாங்கலாம். தாங்கள் அக் கட்டணத்தை அறிவிடாவிட்டால் எல்லோரும் அங்கு நெருக்கமாக இக் காலகட்டத்தில் அதிகமானவர்கள் சேர்ந்து நிற்பது தவறு என்று அரசாங்கம் கூறுகின்றது. அவ்வாறு இருக்கும் போது இக் கட்டணத்தை அறவிட்டால் நல்லது என்றுதான் நினைக்கின்றேன். கட்டணம் 20 ரூபா என்று இருக்கின்றது அதை 50 ரூபாவாக மாற்றி கட்டணத்தை அறவிட்டு பிள்ளைகளுக்கு இலவசமாகவும், பெற்றோர்கள் அதற்குள் செல்வது என்றால் கட்டணத்தை அறிவிட்டால் நல்லது என்று நினைக்கின்றேன். ஏனென்றால் இங்கு இருக்கின்ற பெற்றோர்கள் ஒருவர் மட்டும் செல்வதில்லை. தாய், சகோதரி என்று வரிசையாக சென்று அவர்கள் அங்கு Bench இல் இருந்து கதைத்துக் கொண்டிருக்கின்றார்கள். அது நல்ல விடயம்தான். ஆனால் இக் காலகட்டத்தில் அவ்வாறு செய்ய முடியாது. ஆகவே எமது கட்டணத்தை 50 ரூபாவாக மாற்றலாம் என்று நினைக்கின்றேன். இது மற்றவர்களுக்கு தவறாக இருந்தால் மன்னிக்கவும்.

**கௌரவ உறுப்பினர் ஏ.யூசுப் லெப்பை அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, எமது பிரதேச சபையின் செயற்பாட்டில் உள்ளதுதான் இந்த சிறுவர் பூங்கா அமைப்பு என்பது, ஒரு ஊரை பொருத்தமட்டில் அல்லது ஒரு பிரதேசத்தை பொருத்தமட்டில் அதிலும் சிறார்களுக்கு இந்த சிறுவர் பூங்கா அமைக்கப்பட்டுள்ளது. அதன் உச்ச பயனை அந்த சிறார்கள்தான் அடைவார்கள். அந்த அடிப்படையில் ஒரு பிரதேச சபையின் கடமையாக சிறுவர் பூங்கா அமைப்பு என்பது இருப்பதனால் ஏனைய ஊர்களிலும் கூட, ஏனைய இடங்களிலும் கூட பொழுதுபோக்கு இடங்கள் எந்தவித கட்டண அறவீடுகள் இன்றிதான் அப் பகுதி மக்களை ஒரு பொழுது போக்கு இடமாக அந்த சபை அமைத்து அதன் பொறுப்பினை செய்ததன் காரணத்தால் அப் பகுதி மக்கள் அதனை அனுபவிக்கின்றனர். இந்த வரப்பிரதாசத்தை நாங்கள் கட்டணம் என்கின்ற ஒரு அறவீட்டின் மூலம் அதை இல்லாமல் செய்கின்ற ஒரு கருத்தை மக்கள் மத்தியில் உருவாக்கும். அது விமர்சனத்திற்கு உள்ளாகும் என்பது எனது கருத்தாக இருக்கின்றது. ஆகவே இக் கட்டணம் அறவிடுவது என்பது என்னைப் பொருத்தமட்டில் பொருத்தமற்றதாக இருக்கின்றது என்பதை கூறிக்கொள்வதோடு,

சிறார்களுக்கு கட்டணம் இல்லை பெரியவர்களுக்குதான் கட்டணம் என்பதை விட நாங்கள் சபையினால் ஒரு காவலாளி வைத்திருக்கின்றோம். அவருக்கு ஒரு கடமை இருக்கின்றது. அவர் ஒரு பெயர்ப்பலகையில் அல்லது விளம்பரத்தில் போட்டு தொங்கவிடலாம். இவ்வாறுதான் சிறுவர்கள் மட்டும் உள்நுழையலாம் பெரியவர்கள் அல்லது அவர்களது பாதுகாவலர்கள் வெளியில் இருக்கலாம் என்று ஒரு அறிவுறுத்தலை சிறுவர் பூங்காக்களில் விடுவது பொருத்தமாக இருக்கும். ஆனால் சிறுவர் பூங்கா என்பது விசாலமான முறையில் அமைக்கப்பட்டிருக்க வேண்டும். 04 பேர் நின்று ஒரு பொழுது போக்குக்காக அவ்விடத்தில் நின்று பரிமாறிக் கொள்வதற்கான ஒரு வசதியற்ற நிலையில் சில சிறுவர் பூங்காக்கள் அமைக்கப்பட்டுள்ளது. அதனால் அப் பகுதிகளில் பாதசாரிகளின் வாகனப் போக்குவரத்துகளில் கூட மிகவும் இடைஞ்சல் ஏற்படுவதாக பொதுமக்களிடத்தில் இருந்து அப்படியான கருத்துக்கள் எம்மை வந்தடைகின்றன. எனவே இனிவரும் காலங்களில் சிறுவர் பூங்காக்களை சரியான அடிப்படையில் அதனை செய்து முடிக்க வேண்டும். கட்டணம் அறவிடுவது என்பது பொருத்தமற்றதாக இருக்கும். இது சபைக்கும், கௌரவ தவிசாளர் அவர்களுக்கும் ஒரு குறைபாடாக மக்கள் கருதுவார்கள் என்று கூறிக்கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம்.றியாஸ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, சிறுவர் பூங்காவிற்கு சிறுவர்களை மட்டும்தான் அழைத்து செல்கின்றார்கள் என்று நினைத்துக் கொண்டிருக்கின்றோம். சில பெற்றோர்களும் மன நிம்மதிக்காகவும், சந்தோசத்திற்காகவும் சில நிமிடங்களை கழித்துக்கொண்டிருக்கின்றார்கள். இது சிறுவர் பூங்கா மட்டுமல்லாமல் அவர்களை கூட்டிச்செல்கின்ற பெற்றோர்களும் கூட 5,10 நிமிடங்கள் குழந்தைகளுடன் இன்பமாக சந்தோசமாக இருந்து கொண்டு வருகின்றார்கள். அதுமட்டுமல்லாது இந்த ஒரு கழியுகத்தில் நேரம் இல்லாத சங்கடத்தையும் ஒரு பிள்ளையை இன்னொரு தாய் தந்தையிடம் அனுப்பினால் அதிலும் 20 ரூபா கட்டணம் என்றால் அந்த 20 ரூபாவை கொடுப்பதற்கு ஒரு சங்கடம் ஏற்படும். நாம் எதிர்காலங்களில் இன்ஷா அல்லாஹ் நான் வைத்த முன்மொழிவின் பிரகாரம் பழைய மார்க்கட்டில் இருந்த CTB நிறுவனத்தை அவர்கள் அவர்களுக்குரிய இடத்திற்கு சென்றால் அதில் ஒரு Park மாதிரி செய்தால் வருமானம் ஈட்டுவதற்கும் அல்லது இதை விட பிரமாண்டமான நவீனமயப்படுத்தப்பட்ட பூங்காவை அமைத்து அதன் மூலமாக வருமானம் பெறலாம் என்று கூறிக்கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
நீங்கள் இந்த முன்மொழிவை சரியாக வாசித்தால் இது வருமானம் பெறுவதற்காக செய்யப்படவில்லை. இது நாம் மட்டும் செய்வதில்லை. நிந்தவூரில், காரைதீவில் அறவிடப்படுகின்றது. இறக்காமம் பிரதேச சபையில் அறவிடப்படுகின்றது. இது Audit Query இல் கூட அவர்கள் கேட்கின்றார்கள் ஏன் இந்த சபை கட்டணம் அறவிடுவதைப்பற்றி யோசிக்கவில்லை என்று, அதில் பல கருத்துக்கள் நமது கௌரவ உறுப்பினர் யூசுப் லெப்பை கூறியது போல் எமது ஊரில் இடவசதி போதாது என்று அது பாரிய ஒரு பிரச்சினை. ஏனென்றால், ஒரு பெரிய சிறுவர் பூங்கா அமைப்பது என்றால் 03 அல்லது 04 ஏக்கர் காணி வாங்க வேண்டும். ஏனென்றால் அரச காணி இல்லை. இருக்கின்றதை வைத்து ஆரம்பிக்க வேண்டும் என்றால் எனக்கு ஞாபகம் இருக்கின்றது மர்ஹூம் அன்வர் இஸ்மாயில் அவர்கள் ஒரு காலத்தில் சேகப்பற்றில் 03 ஏக்கர் காணியை வாங்கி செய்வோம் என்று,

தற்போது அவ்விடத்தில் ஒரு ஏக்கர் 4 மில்லியன் வரும். அப்படியான சூழலில் தான் ஒன்றும் இல்லாமல் இருப்பதை விட கௌரவ உறுப்பினர் முஸ்தபா அவர்களுக்கு தெரியும் நாம் அதை ஆரம்பித்து Bench போட்டதற்கோ கூடுதலான விமர்சனம் வந்தது. விமர்சனத்திற்கு பயந்து நீங்கள் இதில் சபைக்கு கெட்ட பெயர் வரும், தவிசாளருக்கு கெட்ட பெயர் வரும் என்ற எண்ணம் தேவையில்லை. உங்களில் பெரும்பான்மையானவர்களின் கருத்து அறவிடக்கூடாது என்று, எனக்கு அதில் பிரச்சினை இல்லை. ஆனால் நீங்களும் ஒருநாளைக்கு இக் கதிரையில் இருக்கும் போது உங்களுக்கு விளங்கும் ஏன் இப்படி என்று, நிர்வாகம் செய்வது இலேசானது இல்லை. தவிசாளராக இருந்து எல்லோரிடமும் நல்ல பெயர் எடுக்க இயலாது. கெட்ட பெயர்தான் கூட ஆனால் மன நிம்மதிக்கு அதை சரியாக செய்தோம், நல்ல நோக்கத்தோடு செய்தோம்.

**கௌரவ உறுப்பினர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, எமது கௌரவ உறுப்பினர் நளீம் அவர்கள், கௌரவ உறுப்பினர் யூசுப் லெப்பை அவர்கள் கூறியது போல் இக் கட்டணம் உண்மையிலே அந்த 2 பிரதேசத்தை பொறுத்தவரைக்கும் சில வகையில் நியாயப்படலாம். இப் பிரதேசத்தை பொருத்தவரையில் மக்களும் கூட தற்கால சூழல் எந்த இடத்தில் எது இருக்கின்றது என்று தெரியாது. எமது தனிமைப்படுத்தல் 14 நாள் ஆகும். ஆனால் அது மீளவும் சிலருக்கு அந்த தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டு உலகளாவிய ரீதியில் பரவிக்கொண்டுவருகின்றது. எனவே நோக்கம் இரண்டு பொதுநலம் கலந்த சுயநலம். எமது பூங்காவிற்கு ஒரு வருமானமும் அடுத்தது பொதுநலமும் இருக்கின்றது. சம்மாந்துறையை பொருத்தவரைக்கும் பல சலுகைகள் வழங்கி இருக்கின்றோம். ஆனால் கொரோனா காலத்தில் எல்லா வயல்களும் விதைக்கப்பட்டுள்ளது. எல்லா அரச ஊழியர்களும் வீட்டில் இருந்து அவர்களுக்குரிய சம்பளத்தை பெற்றார்கள். அரச வருமானம் இல்லாதவர்களுக்கு 2 தடவை ரூபா 5000.00 வழங்கப்பட்டது. கொடுக்கப்படாதவர்களை எல்லாம் நாங்கள் ஆராய்ந்து பெற்றுக் கொடுத்தோம். இப்படி இருக்கும் போது நாம் பணம் அறவிடலாம்.

Audit Query வருவதனாலும் கட்டணம் ஒன்று பரீட்சாத்தியமாவது நாம் செய்யலாம். எல்லோருக்கும் நல்லவர்களாக இருக்க முடியாது. எனவே இக் கட்டணம் அறவிடுவதில் முற்றாக நிராகரிக்காமல் அதில் கவனம் செலுத்துமாறு வேண்டிக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.எம்.எஸ்.நிலுவ்பா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, சிறுவர் பூங்காவை திறப்பது தொடர்பாக, தற்போது கொவிட் 19 தொற்று வைரஸ் காரணமாக நாம் சிறுவர் பூங்காக்களை இன்னும் ஒரு மாதகால தாமதத்திற்கு பின்னர் திறந்தால் நல்லது என்பது எனது கருத்து. 20 ரூபா அறவிடுவது பெரிதல்ல ஆனால் பாதுகாப்பு நலன் கருதி இன்னுமொரு மாதத்திற்கு பின்னர் சிறுவர் பூங்காக்களை திறந்தால் நல்லது என்பது எனது கருத்து ஆகும்.

**கௌரவ உறுப்பினர் ஏ.யூசுப் லெப்பை அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இன்று பேரூந்துகளை எடுத்துக்கொண்டால் சொகுசு, அரைச் சொகுசுக் கட்டணம் என்ற அடிப்படையில் வருமானங்களை அரசாங்கம் வகைப்படுத்தி இருக்கின்றது. ஏனென்றால் வசதியற்ற பொது மக்கள் இலங்கை போக்குவரத்து சபைக்கான பேரூந்திற்கு அரைக்கட்டணம் செலுத்தி மக்கள் செல்வார்கள். அதற்கான வசதிகள் அப் பேரூந்திற்கு ஏற்படுத்தப்பட்டிருக்கும். அதே போல் நாம் கட்டணம் அறவிடுவது பிரச்சனை இல்லை. அக் கட்டணம் அறவிடுவதற்கான வசதிகளை அந்த சிறுவர் பூங்காவிற்கு வருகின்ற சிறார்களுக்கோ, பெரியவர்களுக்கோ ஏற்படுத்தி வைத்திருக்கின்றோமா என்பதை சற்று சிந்திக்க வேண்டும். அத்தோடு எமது பிரதேச சபையின் வருமானம் என்பது வருமானம் குறைந்த சபையாக எமது சம்மாந்துறை பிரதேச சபை இல்லை என்பதை பல தடைவ இச் சபையில் தாங்கள் கூறியிருக்கின்றீர்கள். அந்த அடிப்படையில் சிறார்களுக்குரிய அவ் இடத்திற்கு கட்டணம் அறவிடுவது பொருத்தமற்றது என்பதுடன் சிறார்களை அழைத்து வருகின்ற பெற்றோர்கள் அவர்களின் பாதுகாப்பையும், விளையாட்டு சாதனங்கள் மூலம் விளையாடுகின்ற போது அதற்கான பாதுகாப்பையும் அப் பெற்றோர்கள் சிறார்களுக்கு வழங்க வேண்டியுள்ளது. அப் பெற்றோர்களை இடமாற்றினால் அவர்களுக்குரிய பாதுகாப்பு கொடுக்க முடியுமா என்ற கேள்வியும் என் மனதில் எழுகின்றது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
நான் கௌரவ உறுப்பினர்களுக்கு ஒன்று சொல்ல வேண்டும். இந்த சபையின் நடவடிக்கைகள், சபையின் வசதிகளைப் பற்றி பேசும் போது நீங்கள் சபையை இழிவுபடுத்துவது போல் பேசக்கூடாது. சிறுவர் பூங்காக்கள் எவ்வளவு கஸ்டப்பட்டு அமைக்கப்பட்டது. கட்டணம் அறவிடுவதா இல்லலையா என்பது வேறு விடயம். அதை ஏதோ இழிவுபடுத்தி கருத்து தெரிவிப்பது பிழையான கருத்து. நீங்கள் மிகவும் கவனமாக சொற்பிரயோகங்களை பாவிக்க வேண்டும். சிலர் அதன் பாரதூரம் விளங்காமல் கதைக்கின்றார்கள். கௌரவ உறுப்பினர் நிலுவ்பா அவர்கள் கூறியது போல் சிறுவர் பூங்காவை திறக்கலாமா என்ற ஒரு கேள்வியும் எனக்குள் வந்தது. ஏனென்றால் அவர்களை அழைத்து வருகின்ற பெற்றோர்கள் எங்கு சென்று வருகின்றார்கள், என்ன செய்கின்றார்கள் என்று எமக்கு ஒரு கட்டுப்பாடு இல்லை. வெளியூரில் இருந்தும் வருகின்றார்கள். அவர்களிடம் தேசிய அடையாள அட்டையை காட்டுங்கள், நீங்கள் சம்மாந்துறையா? என்று கேட்கலாமா என்ற கேள்வியும் வருகின்றது. ஆனால் இக் காலகட்டத்தில் கேட்க வேண்டும். வெளியூரவர்கள் இங்கு வந்து இதை பாவிப்பதை நாம் சில வேளை தடை செய்ய வேண்டி வரும் இந்த கொவிட் 19 காலத்தில். இது இன்னும் எமது சமூகத்தைவிட்டு போகவில்லை என்றுதான் அரசாங்கம் அறிவித்துக் கொண்டு வருகின்றது. நாம் கட்டணம் அறவிடுவதில்லை என்று முடிவெடுப்போம். ஆனால் திறக்கப்படுகின்ற காலத்தில் அபிவிருத்தி நிதியம் என்று ஒரு உண்டியலை வைப்போம்.

எமது திண்மக் கழிவுக்கு என்று 2 Compactor, ஒரு Tipper Truck, 5 Tractor பாவிக்கப்படுகின்றது. Compactor இல் ஒன்று கிட்டத்தட்ட 7 வருடமும், மற்றயது 1 ½ வருடமும் Tipper Truck 7 வருடமும், ஏனைய Tractor எல்லாம் 20 வருடத்திற்குட்பட்டதும், 10 வருடத்திற்கு மேற்பட்டதும்

ஆகும். இது உக்காத கழிவுகளை எடுத்து செல்லும் போது எல்லா வாகனமும் அட்டாளைச்சேனைக்கு செல்கின்றது. அதனால்தான் செலவீனத்தில் பராமரிப்பு செலவு, திருத்தச் செலவு ஒரு சுமை. அதன் ஓட்டத்தை கட்டுப்படுத்தாவிட்டால் அது இன்னும் இன்னும் சுமையாகத்தான் வரும். இதற்கு மாற்றுவழி எப்படி நாம் அட்டாளைச்சேனைக்கு செல்கின்றதை ஒருங்கிணைத்து ஒரு வாகனத்தில் அல்லது இரண்டு வாகனத்தில் அனுப்பலாம் என்று, கல்முனை மாநகர சபை அதை வெற்றிகரமாக செய்கின்றது. அதாவது 2 Tipper எடுத்து அவர்களின் Yard இற்கு எல்லா குப்பைகளையும் அங்கு சேகரித்து அது எல்லாவற்றையும் Tipper இல் ஏற்றி Tipper உம் Compactor உம் செல்கின்றது. ஏனைய Tractor எல்லாம் ஊருக்குள் செல்கின்றது. அதே போல் எமக்கு கிட்டத்தட்ட 14 தொன் வருகின்றது.

ஒரு நாளைக்கு 2 Compactor யையும் மற்ற Tipper யையும் ஒரு புது Tipper உம் வாங்குவோமானால் Tractor கள் அட்டாளைச்சேனைக்கு செல்ல தேவையில்லை. இதில் 2 விடயம் இருக்கின்றது. ஒன்று அவ் வாகனங்கள் ஊருக்குள் மட்டும்தான் செல்லப் போகின்றது. மற்றயது அட்டாளைச்சேனைக்கு சென்று வருவதனால் 2 Trip இல்லாமல் ஆகின்றது. இவ் வாகனம் சென்று வரும் வரைக்கும் ஊழியர்கள் வேலை இல்லாமல் இருக்கின்றார்கள். இதை Compost Yard க்குள் இறக்கிவிட்டு வருவது என்றால் இன்னும் சில பிரதேசங்களை உள்வாங்கலாம். ஒரு நாளைக்கு கிட்டத்தட்ட 04 தடவை போகலாம். நீண்ட காலமாக எமக்கு அயல் கிராமங்களில் இருந்து திண்மக் கழிவு முகாமைத்துவம் செய்யப்படவில்லை என்ற குற்றச்சாட்டு, கவலை ஒன்று இருக்கின்றது. அதை நான் நியாயப்படுத்துவதற்கு காரணம் கிராம புறங்களை பட்டின பகுதிக்குள் இருக்கின்ற பழக்கங்களுக்கு உள்ளாக்கக் கூடாது என்றுதான் நாம் அதை செய்தோம். வளத்தாப்பிட்டியில் இருந்து மல்லிகைதீவு, மல்வத்தை, மஜீட்புரம் போன்ற இடங்களில் ஒவ்வொரு சனிக்கிழமையும் உக்காத கழிவுகளை எடுக்கலாம். இவ்வாறு செய்தால் அடுத்த கட்டமாக அவர்களிடம் இருந்து திண்மக் கழிவு கட்டணம் அறவிடலாம்.

**தீர்மானம் - 04/29/04**

திண்மக் கழிவகற்றல் செயற்பாட்டில் வினைத்திறன் மற்றும் செலவுச் சிக்கனம் என்பவற்றை பேணுவதற்காக சபை நிதி மூலம் Tipper Truck ஒன்றினை கொள்வனவு செய்வதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | கே.எல்.சிஹாமா |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாக அனுமதிக்கப்பட்டது.

**கௌரவ உறுப்பினர் எஸ்.நளீம் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, கடந்த வருடம் 2019 ஆம் ஆண்டில் 11ம் மாதம் இடம்பெற்ற சபை அமர்விலே ஏகமனதாக தீர்மானம் எடுக்கப்பட்டது சென்னல் கிராமம் 2ம் பிரிவிலே உள்ள புளியடி வீதியிலே 40 வீட்டுப்பகுதியிலே இருக்கின்ற மலைப் பகுதியிலே இருக்கின்ற நீர் வடிகான் சரியான கட்டமைப்பில் இல்லாதபடியினால் அப் பகுதி மக்களின் வீடுகள் தாழ்வதாகவும், அப் பாதையினை நீர் வந்து உடைத்துக் கொண்டு செல்வதால் இன்று மக்கள் பாவனைக்கு மிகவும் கஸ்டப்படுகின்ற பாதையாக இருக்கின்றது என்ற எமது சபையின் ஏகோபித்த தீர்மானத்திற்கு அமைய சென்னல் கிராமம் - 02ம் பிரிவில் உள்ள அப்ரார் வீதிக்கான வடிகான் ஒன்றினை அமைத்து Transformer வீதியில் உள்ள வடிகானுடன் அதனை சேர்ப்பதன் ஊடாக இந்த மழைநீர் புளியடி வீதியினை உடைப்பதையோ அல்லது அப் பகுதி மக்களின் வீடுகளை சேதப்படுத்துவதில் இருந்து தவிர்க்கலாம் என்ற அடிப்படையில் எமது சபையினால் மதிப்பீடு செய்யப்பட்ட போது அவ் வேலைத்திட்டங்களை செய்வதற்கு ஏரத்தாள 3 மில்லியன் பணம் தேவைப்பட்டது. ஆகவே சபையில் இருந்து இவ்வாறான நிதியை ஒரே கட்டத்தில் எடுக்க முடியாது என்கின்ற காலகட்டமாக இருந்ததனால் அதே சூழ்நிலையில் அதிமேதகு ஜனாதிபதி அவர்களினால் அறிமுகப்படுத்தப்பட்ட சப்பிரிகம வேலைத்திட்டம் அந்த கால கட்டத்திலே ஆரம்பித்ததனால் அக் கிராமத்திற்கு ஒரு

வேலை என்ற அடிப்படையில் அப்ரார் வீதிக்கான வடிகான் அமைப்பு முன்னுரிமைப்படுத்தப்பட்டு இன்று அவ் வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. எனவே சில வேலைக்காக 2 மில்லியன் பணம் ஒதுக்கப்பட்டிருந்தது. எமது மதிப்பீட்டறிக்கையின் படி மீதி வேலையை செய்வதற்கு இன்னும் 1 மில்லியன் பணம் தேவைப்படுகின்றது. இவ் வேலையை செய்து முடிப்போமாக இருந்தால் பெரும்போக அடைமழை 11ம் மாதம் 12ம் மாத மழையில் இருந்து அப் பிரதேச மக்களினையும், அவ் வீதியினையும் பாதுகாப்பதற்கு ஒரு வழியாக இருக்கும் என்பதற்காக இத் திட்டத்தினை முன்மொழிந்தேன். எனவே கௌரவ உறுப்பினர்கள் எல்லோரும் அம் மக்களின் நிலமையினை கருத்திற் கொண்டு இதனை செய்வதற்கு ஆவண செய்யுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இதன் முக்கியத்துவம் எனக்கு நன்றாக தெரியும். அப் பகுதியில் மழை காலத்தில் சென்று பார்த்திருப்பீர்கள். தற்போது கூட நாம் வீடுகளை தேடித் தேடி உடைத்துக் கொண்டு அதனை இங்கு கொட்டுகின்றோம். நீற்று வீடுகள் உடைப்பதனால் அதனை வீதிக்கு போட்டால் நீறு இறுகி கொங்கிறீட்டையும் பார்க்க அழகாக இருக்கும். தற்போது ஓரளவுக்கு நிவர்த்தி செய்து விட்டோம். ஒரு மில்லியன் ஒரு வேலைக்கு ஒதுக்குவது என்பது கஸ்டமான விடயம். இதை நாம் அந்த சமூகத்தோடு பேசி எந்தளவுக்கு இந்த செலவீனங்களை குறைக்கலாம். சமூக பங்களிப்பு ஒன்று உருவாக்கலாமா? என்று அந்த திசையிலும் சென்று பார்க்க வேண்டும். உங்களுக்கு தெரியும் Budget இல் வடிகான் அமைத்தலுக்கு என்று ஒரு மில்லியனோ, இரண்டு மில்லியனோ ஒதுக்கி இருப்போம்.

**கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இப் பிரதேச மக்கள் அன்றாட தொழில் செய்பவர்கள். இவ் வேலையின் 2/3 பங்கு முடித்திருக்கின்ற படியினால் மீதி வேலை முடிக்கவில்லை என்று சொன்னால் ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்ட வேலைகளில் எந்தப் பிரயோசனமும் இல்லை. மீண்டும் அவ் வளவுகளில் நீர் சென்று அவ் வீதியை உடைக்குமானால் ஏற்கனவே சப்பிரிகமயினால் ஜனாதிபதி அவர்களால் வழங்கப்பட்ட நிதிக்கும் பிரயோசனம் இல்லை.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அந்தப் பகுதியில் வாழுகின்ற மக்கள் நாளாந்த தொழில் செய்பவர்கள். ஆனால் அப் பகுதியில் உள்ள வளவு சொந்தக்காரர்கள் நல்ல வசதியுள்ளவர்கள். நாம் எந்தளவுக்கு இந்த Estimate ஐ பாரத்து அதன் சுமையை குறைக்கலாம். ஏனென்றால் அம் மக்களுக்கு ஒரு உணர்வு ஒன்று வரும். இதை வெற்றிகரமாக தமிழ் சிங்கள கிராமங்களில் செயற்படுத்துகின்றார்கள். உள்ளூராட்சி ஆணையாளர் ஒருநாள் என்னுடன் கதைத்துக் கொண்டு இருக்கும் போது இதைப் பற்றி நீங்கள் யோசிக்க வேண்டும். உங்களின் மக்கள், உங்களின் அரசியல்வாதிகள் மக்களை எந்தப் பங்களிப்பும் இல்லாமல் செய்து கொடுத்தால் அவர்களுக்கு ஒரு சுமையும் இல்லை. இதனால் NGO க்களும் பழக்கி 20 வீதமாவது மக்களின் பங்களிப்பு இருக்க வேண்டும். அதில் நாமும் எமது அபிவிருத்திகளில் அந்தப் பங்களிப்பை எடுக்க வேண்டும். இதை எந்தளவுக்கு மக்கள் பங்களிப்போடு செய்யலாம் என்பதை உள்வாங்க வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.நளீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கௌரவ தவிசாளர் அவர்களின் கருத்தினை உள்வாங்கியவனாக, மதிப்பீடு செய்யப்பட்ட இந்த வேலைத்திட்டத்தினை விட தற்போது மேலதிகமாக நான் நினைக்கின்றேன் 0.5 மில்லியன் பணம் தேவைப்படும். ஏனென்றால் அவ் வீதியிலே உள்ள 2 தனிநபர்களுக்கு சொந்தமான காணிக்கும் வீதிக்கும் இடையே ஏறத்தாள 2m பள்ளம் இருக்கின்றது. அதற்கு ஒரு Returning Wall அடித்துதான் வடிகான் செய்வதற்கு தற்போது திட்டமிடப்பட்டிருக்கின்றது. எனவே கௌரவ தவிசாளர் அவர்கள் கூறிய படி மக்கள் பங்களிப்போடு அந்த தனிநபர் இருவர்களின் காணியை நாங்கள் சபையினால் கொட்டுகின்ற மண் போன்றவற்றை இட்டு பள்ளத்தை நிரப்பினால் அதில் இருந்து 0.5 மில்லியன் பணத்தை மீதப்படுத்தலாம். அதே

போன்று அந்த வேலை செய்வதற்கான மதிப்பீடு குறிப்பிட்ட பகுதி கொங்கிறீட் வடிகானாகவும், ஏனைய மீதிப் பகுதி Returning Wall ஒரு பக்கம் கருங்கல்லால் கட்டிக் கொண்டு வருவதாகவும் தீர்மானிக்கப்பட்டது.

ஆகவே மக்கள் பங்களிப்பு என்று சொல்லுகின்ற போது எமது தொழில்நுட்ப உத்தியோகத்தரும் அந்த நேரமே ஆலோசனை தந்தார். அதாவது அப் பிரதேசத்திலே கூடுதலான மலைகள் இருக்கின்றது. அதை உடைத்து எமக்கு தேவையான முண்டுக் கல்லை பெற்றுக் கொள்ளலாம். இன்ஷா அல்லாஹ் என்னுடைய உயிர் இருந்தால் இச் சபையினால் அவ் வேலை அறிமுகப்படுத்தப்பட்டால் என்னால் முடியுமான பங்களிப்பை செய்வேன் என்ற உறுதியை இச் சபையிலே கூறிக் கொள்கின்றேன். கௌரவ தவிசாளர் அவர்கள் கூறியவாறு அப் பிரதேசத்திலே வசிக்கின்ற மக்களிடம் இருந்து மக்கள் பங்களிப்பு என்று பணத்தினை நாம் எதிர்பார்ப்பது கடினமாக இருக்கும். ஆனால் அவர்களால் முடியுமான உதவிகளை நாம் பெற்றுக் கொள்ளலாம். சமூக அமைப்புகள், சமுர்த்தி அமைப்புகள், சிவில் அமைப்புகள் இவர்களின் ஊடாக எமக்கு தேவையான வேலைகளை செய்து கொள்ளலாம். தற்போது அவ்விடத்தில் இருக்கின்ற வேலைகளும் மனித வளத்தைக் கொண்டு செய்யக் கூடிய அமைப்பில் இல்லை. ஏதோ ஒரு இயந்திரத்திரத்தினை பயன்படுத்தி செய்ய வேண்டிய தேவைப்பாடு இருக்கின்றது. எது எவ்வாறாயினும் மீதி வேலையை துரிதப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டால் அப் பிரதேச மக்களுக்கு மிகப் பெரிய நற்சான்றாக இருக்கும் என்று நான் நினைக்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இதை சமூக பங்களிப்போடு இயலுமான அளவு அதனை குறைத்து செய்ய வேண்டும்.

### தீர்மானம் - 04/29/05
சென்னல் கிராமம் - 02 இல் அப்றார் வீதியின் மீதி வடிகான் அமைப்பு வேலையினை செய்வதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ்.நளீம் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.ரீ.பௌசுள்ளாஹ் |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாக அனுமதிக்கப்பட்டது.

### தீர்மானம் - 04/29/06
eLG செயற்றிட்டத்தின் கீழ் உரிய மென்பொருளை (Software) பராமரிப்பதற்கான கொடுப்பனவுக்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | என்.கோவிந்தசாமி |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாக அனுமதிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
விளையாட்டு கட்டிடடத் தொகுதியில் உள்ள பழைய கதிரைகளை இம் முறை Board of Survey இற்கு சென்று ஏலத்தில் விற்கப்படுவதால், அதற்கு பதிலாக அதற்கு தகுதியான கதிரைகளை கொள்வனவு செய்ய வேண்டும்.

### தீர்மானம் - 04/29/07
விளையாட்டுக் கட்டடத் தொகுதியில் பாவிக்கப்பட்ட பிளாஸ்டிக் கதிரைகள் தற்போது பாவனைக்கு உகந்த நிலையில் இல்லாத காரணத்தினால் உரிய தேவைகளுக்கு உகந்த கதிரைகளை பதிலீடு செய்வதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உப தவிசாளர் | ஏ.அச்சி முஹம்மட் |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாக அனுமதிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
மடுவத்தை கழுவுவதற்கு Tap Water பயன்படுத்துகின்றோம். கிட்டத்தட்ட ரூபா 9000.00 தொடக்கம் ரூபா 10000.00 மாதாந்த கட்டணம் வருகின்றது. இதில் வழமையான Tube Well அமைக்கலாம். ஆனால் இந்த நீருக்கு ஒரு உத்தரவாதம் இல்லை. கோடை காலத்தில் நீர் இல்லாமல் போகலாம். நாம் சபை என்ற ரீதியில் இதை சட்டபூர்வமாக நீர் வடிகால் அமைப்பு சபையுடன் தொடர்பு கொண்டு அதற்குரிய நடவடிக்கை எடுக்கலாம்.

### தீர்மானம் - 04/29/08

கொள்களத்தின் நீர்க்கட்டண செலவு விரயத்தினைக் குறைப்பதற்காக Bore Well இனை தேசிய நீர்வழங்கல் வடிகால் அமைப்புச் சபையுடன் தொடர்புகொண்டு தயாரிப்பதற்கான பிரேரணை.

பிரேரித்தவர் : கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட்
ஆமோதித்தவர் : கௌரவ உறுப்பினர் ஏ.சி.எம்.சஹீல்

இப் பிரேரணை சபையில் ஏகமனதாக அனுமதிக்கப்பட்டது.

### தீர்மானம் - 04/29/09

ஏற்கனவே தீர்மானித்ததற்கமைய பிரதான அலுவலகம், ஹிஜ்ரா பொதுச் சந்தை, அப்துல் மஜீட் பொது மண்டபம் என்பவற்றில் Solar System மூலம் மின் உற்பத்தி நடவடிக்கை மேற்கொள்வதற்கான செயற்றிட்டப் பிரேரணை.

பிரேரித்தவர் : கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட்
ஆமோதித்தவர் : கௌரவ உறுப்பினர் ஏ.சி.எம்.சஹீல்

இப் பிரேரணை சபையில் ஏகமனதாக அனுமதிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
மல்வத்தை ஆயுள்வேத வைத்தியசாலைக்கு கடிதம் ஒன்று அனுப்பினோம். அவர்கள் எந்தக் காணி என்ற விபரங்களை கேட்கின்றார்கள். அதற்கு நாம் எந்தக் காணியை இணங்கண்டோம்?

**கௌரவ உறுப்பினர் கே.எம்.இன்பவதி அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, மல்வத்தை அலுவலத்திற்கு அருகில் உள்ள காணி ஆகும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
நாம் நிலத்தை வழங்குவது என்றால் அமைச்சின் அனுமதி வேண்டும். அவர்களுக்கு அதற்குள் அமைப்பதற்கு அனுமதி கொடுக்கலாம். உப அலுவலக வளாகத்துக்குள் பொருத்தமான இடத்தை வழங்குவதற்குரிய தீர்மானத்தை எடுத்து அமைச்சருக்கு அனுப்புவோம்.

### தீர்மானம் - 04/29/10

மல்வத்தை உப அலுவலக வளாகத்தின் தென்புறமாயுள்ள பிரதேசத்தில் ஆயுள்வேத வைத்தியசாலை அமைப்பதற்காக நிலத்தினை வழங்குவதற்கான பிரேரணை.

பிரேரித்தவர் : கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட்
ஆமோதித்தவர் : கௌரவ உறுப்பினர் கே.எம்.இன்பவதி

இப் பிரேரணை சபையில் ஏகமனதாக அனுமதிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
எமது சபைக்கு சிங்கள கடிதங்கள் வருகின்றது. அது வந்தவுடன் தவிசாளர்தான் Translator. எனவே சிங்கள மொழியில் கல்வி கற்ற தகுதியான ஒருவரை ஒப்பந்த அடிப்படையில் ஒரு கிழமையில் 2 அல்லது 3 நாள் எடுத்து செய்யலாம். கொழும்பிற்கு கடிதம் ஒன்று எழுதினால் அதை வாசிப்பதற்கு அங்கு ஒருவரும் இல்லை. கிழக்கு மாகாணத்தில் அம்பாரையில் கூட தமிழ் வாசிப்பதற்கு ஒருவரும் இல்லை. அம்பாரை அலுவலகத்திற்கு அனுப்புவது என்றாலும் சிங்களத்தில் தான் அனுப்ப வேண்டும். எனவே இதற்கு தகுதியான ஒருவரை உடனடியாக நியமிக்க வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.எம்.எம்.முஸ்தபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கடிதங்களை சிங்களத்தில் அனுப்ப தொடங்கினால் பின்னர் கடிதங்கள் எல்லாம் சிங்களத்தினால் வருவதற்குரிய வாய்ப்புகள் இருக்கின்றது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
தற்போது சிங்களத்தில்தான் வருகின்றது. ஆனால் நாம் தமிழில் எழுதுகின்றோம்.

**தீர்மானம் - 04/29/11**
சிங்கள மொழியில் கல்வி பயின்று நன்றாக தேர்ச்சி பெற்ற ஒருவரை ஒப்பந்த அடிப்படையில் (தற்காலிக அடிப்படையில்) மொழிபெயர்ப்பு மற்றும் கடித வேலைகளை ஆற்றுவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உப தவிசாளர் | ஏ.அச்சி முஹம்மட் |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாக அனுமதிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கைகாட்டி குளத்திற்கும் புதிதாக அமைக்கப்பட்ட பாலத்திற்கு இடையில் ஒரு கல்வெட் உடைக்க இருப்பதால் அது உடைத்த பின்னர் அவ்விடத்தில் 2 பக்கமும் கல்லரிச்சல் பிரதேசம் போல் அப் பிரதேசத்தை அழகுபடுத்தி இருப்பிடங்கள் அமைத்தால் சிறப்பாக இருக்கும்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம்.றியாஸ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, சின்னப்பள்ளிவாசல் அருகில் மரத்திற்கு கீழ் அழகுபடுத்தி இதே போல் செய்ய வேண்டும். பழைய மார்க்கட் தொடர்பாக அதற்கு ஆதரவு தந்த உங்களுக்கும், சபையோருக்கும் நன்றி தெரிவிக்க வேண்டும். அதற்கு நிதி ஒதுக்கீடு செய்த கௌரவ முன்னாள் அமைச்சர் றிஷாட் பதியுதீன் அவர்களுக்கும் நன்றியை தெரிவித்து, அதுமட்டுமல்லாமல் பழைய மார்க்கட் என்று அதனை கூறுகின்றார்கள். அதன் உண்மையான பெயர் ஆலையடி பொதுச் சந்தை ஆகும். எனவே அதற்கு ஒரு பெயர்ப்பலகையை அமைப்பதற்கு ஆவண செய்யுமாறும் கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
நிச்சயமாக சின்னப்பள்ளி பிரதேசம் அது உண்மையாக நீங்கள் எல்லோரும் நன்றி சொல்ல வேண்டும். எமது முன்னாள் உறுப்பினர் நிசாம் அவர்களுக்கு, ஏனென்றால் அவரின் முயற்சிதான் அது. தற்போது அவ் இடத்தை அழகுபடுத்தி இருப்பிடங்கள் அமைக்கலாம். ஆனால் அப் பகுதி மக்கள் பராமரிக்க வேண்டும்.

நான் பழைய அலுவலகத்தில் சென்று பார்த்தேன் 2 நினைவுக் கல் இருக்கின்றது. ஒன்று அடித்தளம் அமீர் அலி தவிசாளர் அவர்களின் காலத்தில், அதன் பின்னர் 2,3 மாதத்தின் பின் அவர் இருக்கவில்லை மர்ஹூம் கமல் காரியப்பர் அவர்கள் பாரம் எடுத்ததாக இருக்கின்றது. நான் நினைத்தேன் 2 கல்லையும் பதிப்போம் என்று, புதுப்பித்ததற்கு கௌரவ முன்னாள் அமைச்சர் ரிசாட் பதியுதீன் அவர்களின் பங்களிப்பிற்காக அவரின் நிதி உதவியால் செய்தது என்று அவ்விடத்தில் வரும்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம்.றியாஸ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, அதற்கும் ஒரு கல்வெட்டு எனது செலவில் செய்தது அதையும் வைக்க வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் எம்.எஸ்.சரீபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கொச்சிக்காய்தூளர் சந்தியிலும் இருப்பிடங்கள் அமைத்து அழகுபடுத்தி தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கௌரவ உறுப்பினர் முஸ்தபா அவர்களுக்கு தெரியும், முதன் முதலாக அந்த சந்தியில்தான் இருப்பிடங்கள் அமைத்தோம். ஆனால் 2 கிழமையால் அதை உடைத்துவிட்டார்கள். அப் பிரதேசத்தை கட்டாயம் அழகுபடுத்த வேண்டும். ஆனால் அவ்விடத்தில் இருக்கின்ற மக்கள் அழகுபட வேண்டும். தேர்தல் காலத்தில் பார்த்தால் அப் பாலத்தில்தான் இருப்பார்கள். அவ்விடத்தில் செய்யலாம் ஆனால் ஒரு சனசமூக நிலையம் பொறுப்பெடுத்தால் நிச்சயமாக செய்யலாம்.

**கௌரவ உறுப்பினர் எம்.எஸ்.சரீபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, தற்போது அவ் இடத்தில் இருப்பவர்களே இதற்கு பாதுகாப்பு அளிப்போம் என்று உத்தரவு தந்துள்ளார்கள். எனவே அவ் இடத்தை சனசமூக நிலையம் ஊடாக அமைப்பதற்கு ஏற்பாடு செய்யலாம்.

## தீர்மானம் - 04/29/12
கைகாட்டி குளத்திற்கும் புதிதாக நிர்மாணித்த பாலத்திற்கும் இடையான வண்டுவாய்க்கால் இரு புறங்களையும், சின்னப்பள்ளி, கொச்சிக்காய் தூளர் சந்தி போன்ற இடங்களையும் அழகுபடுத்தி, ஒளிஊட்டி இருப்பிடங்கள் அமைப்பதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.எஸ்.சரீபா |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாக அனுமதிக்கப்பட்டது.

## தீர்மானம் - 04/29/13
ஆலையடிச் சந்தையில் பெயர்ப்பலகை அமைத்து அதனை புணரமைத்த விடயங்கள் உள்ள நினைவுக் கல் பதிப்பதற்குமான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எம்.எம்.றியாஸ் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.ரீ.பௌசுள்ளாஹ் |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாக அனுமதிக்கப்பட்டது.

**கௌரவ உறுப்பினர் கே.எம்.இன்பவதி அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, அழகுபடுத்தல் என்ற ரீதியில் மல்வத்தையில் இருக்கின்ற 3 கடைகள் அவலட்சனமாக காட்சி அளிக்கின்றது. கடந்த வாரம் ஓடு ஒன்று ஒருவருடைய தலையில் விழுந்தது. அவர் மிகவும் மோசமான நிலையில் பாதிக்கப்பட்டுள்ளார். Bus Stand இற்கு பக்கத்தில் உள்ள தகரக் கொட்டில் அருவருப்பான நிலையில் காட்சி அளிக்கின்றது. அவ் இடம் உண்மையிலே மல்வத்தை என்ற அவலட்சனமான முறையில் காட்டுகின்றது என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
முதல் நாம் இதைப்பற்றி கதைத்து இருக்கின்றோம். இதன் பிரச்சினை என்னவென்றால் Road Reservation இற்குள் வருகின்றது. அதை உடைத்தால் மீண்டும் அதை கட்டஇயலாது.

**கௌரவ உறுப்பினர் கே.எம்.இன்பவதி அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, அதை மீள்பரிசீலனை செய்யலாம்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அதற்கு Estimate எடுத்து சபையும் அனுமதி செய்திருக்கின்றது. இக் கிழமைக்குள் அதனைப் பார்ப்போம்.

**கௌரவ உறுப்பினர் கே.எம்.இன்பவதி அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, அவ்விடத்தில் ஒரு Bus Halt அமைத்தால் சிறப்பாக இருக்கும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
உண்மையாக அந்த Bus Halt அந்த Contractor இனால் கட்டப்பட்டிருக்க வேண்டும். இதுதான் நிபந்தனை.

**கௌரவ உறுப்பினர் கே.எம்.இன்பவதி அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, அதுமட்டுமல்லாமல் அதன் பின்னால் உள்ள ஆலமரத்தின் வேர் வருவதால் வெடித்துக் கொண்டு வருகின்றது. அதையும் அகற்ற வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
ஆலமரத்தின் வேர் எமது எல்லைக்குள் இருந்தால் உடனடியாக அதை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுப்போம்.

**கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, ஆலமரம் அகற்றுகின்ற போது நூலகத்திற்குள் நாக மரம் ஒன்று இருக்கின்றது. அதிலும் ஒரு ஆலமரம் இணைந்து காணப்படுகின்றது. அதையும் நான் பலமுறை சொல்லியிருக்கின்றேன். இப்படியான வேலைகள் நடக்கின்ற போது அதையும் இப்போதே அகற்றினால் சிறப்பாக இருக்கும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
மல்வத்தையில் 2 கௌரவ உறுப்பினர்கள் இருக்கின்றீர்கள். நீங்கள் கிழமைக்கு ஒரு தடவையாவது சென்று Lock Book இனை எடுத்து நீங்கள் என்ன அவதானித்தீர்கள் என்று எழுத வேண்டும். அவ் இடத்தில் 4 ஊழியர்கள் இருக்கின்றார்கள் ஒரு வேலையும் நடக்குதில்லை. நீங்கள் அதை அவ்விடத்தில் இயக்க வேண்டும். வளத்தாப்பிட்டி சந்தை திருத்திக் கொடுத்து தற்போது காடு பிடித்து இருக்கின்றது. அதை பார்ப்பதற்கு ஆட்கள் இல்லை. எல்லாவற்றுக்கும் ஊழியர்கள் என்றால் வருமானம் வர வேண்டும். 21 வட்டாரத்தில் 50% வீதமானவர்கள் கட்டணம் கட்டுகின்றார்கள். இது உங்களின் எல்லோரினது உதவியினாலும், நாம் இன்றைக்கு வெறுமனே அரசியல் செய்கின்ற சபையாக இருந்திருந்தால் இந்த சபையில் பணம் இருக்காது. கிட்டத்தட்ட 7000 மக்கள் இருந்து பெற்று 70000 மக்களுக்காக சேவை செய்கின்றோம். உண்மையாக குற்றப்பணம் வருவது எனக்கு ஒரு குற்ற உணர்வு. இவ்வளவு பணம் Court ஆல் வருகின்றது என்றால் நாம் சட்டத்தை மதிக்காத சமூகம் என்பதை எடுத்துக் காட்டுகின்றோம்.

**கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, நாம் சென்ற முறை மல்வத்தை, முகைடீன், கல்லரிச்சல் நூலகங்கள் மூன்றையும் சென்று பார்வையிட்டோம். கல்லரிச்சல் பிரதேசத்தை பொறுத்தவரையில் அங்கு இருக்கின்ற மக்களுக்கு வேறு எந்தவொரு நிறுவனமுமே இல்லை. வெளியாட்கள் செல்வதற்கு எந்தவொரு வாய்ப்புமே இல்லை. அந்தப் பிரதேசத்தில் உள்ளவர்களும் வாசிப்பு திறன் கூடவில்லை. கிட்டத்தட்ட 500 பேர் இருக்க வேண்டிய இடத்தில் சொற்ப அளவிலான அங்கத்தவர்கள் இருப்பதைக் கண்டோம். அப் பாடசாலை அதிபர்களையும், பாடசாலை மாணவர்களும் உள்வாங்கப்பட்டு கல்விக்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

அதே போல் மல்வத்தை நூலகம் அந்தப் பக்கம் மாற்றுவதற்கு சனசமூக நிலையம் முனைப்பாக இருக்கின்றார்கள். அவர்களுக்கு அந்த மரத்தின் கீழ் Bench போட்டால் அவ் இடத்திலும் வாசிப்பை இன்னும் ஊக்குவிக்கலாம். அதே போல் எமது 20 உறுப்பினர்களின் பெயரை குறிப்பதாக ஒரு பெயர்ப்பலகை வைப்பதாக ஒரு தீர்மானம் எடுத்தோம். அது இன்னும் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கல்லரிச்சல் அஸ்ரப் நூலகம் அது நிச்சயமாக ஒரு செயற்பாடு நடக்க வேண்டும். ஆனால் அதற்குள் இடமில்லை. அக் கட்டிடம் எமக்குரியது அல்ல. ஒரு பொதுத் தேவை கட்டடத்தில் மேல் மாடியில் நாம் இருக்கின்றோம். அப்படியென்றால் கீழ் இருக்கின்ற பரப்பிற்கு மேல் ஒரு பரப்பு போட்டுதான் செய்ய வேண்டும். இல்லாவிட்டால் மாற்று இடம் MPCS வளவு இருக்கின்றது. அதை பாடசாலையும் கேட்கின்றது.

பெயர்ப்பலகை தொடர்பாக முடிவு ஒன்று எடுத்ததாக எனக்கு ஞாபகம் இல்லை. அவ்வாறு எடுத்திருந்தால் அது செயற்படுத்தப்பட்டிருக்கும்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.நளீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, ஒரு சபை அமர்வின் போது இக் கட்டடம் கட்டப்பட்டு திறப்பு விழா தொடர்பாக பேசும் போதுதான் அவ் விடயத்தை கூறினேன். முதற் பெண்மனிகளை கௌரவப்படுத்துவதாகவும், 1979 ஆம் ஆண்டின் பின்னர் அரசியல் யாப்பில் ஏற்பட்ட மாற்றத்தின் பிரகாரம் வட்டார ரீதியாக தெரிவு செய்யப்பட்டவர்களையும் கௌரவப்படுத்தி முதலாவது கௌரவ உறுப்பினர் என்ற வகையில் 19 கௌரவ உறுப்பினர்கள், கௌரவ தவிசாளர் அனைவரினதும் பெயர்களைக் கொண்ட பெயர்ப்பலகை இச் சபையில் வைப்பதாக முடிவு செய்யப்பட்டது. எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கின்றது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
முதன் முதலாக சரித்திரத்தை வெளியே கொண்டு வந்த பெருமை எமது முதல் சபைக்கு இருக்கின்றது. எல்லா படங்களையும் தேடி படங்கள், பெயர்கள் எல்லாம் காட்சிப்படுத்தி அப் புத்தகத்தில் வெளியிடப்பட்டது. நான் யோசித்தேன் நூலகத்தில் வைப்பதா? அல்லது அப்துல் மஜீட் மண்டபத்தில் வைப்பதா? என்று, 48ம் ஆண்டில் இருந்து ஒவ்வொரு சபையாக பெயர்ப்பலகை செய்து பொறுத்தப்படுவது. அப்துல் மஜீட் மண்டபத்தில் வைத்தால் அதற்குள் இருப்பவர்கள் ஒரு சரித்திரத்தை பார்ப்பார்கள்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம்.றியாஸ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, Photo போட்டு செய்வோம்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
Photo போட்டால் எவ்வளவு காலத்திற்கு அதன் Quality இருக்கும் என்பது பிரச்சினை.

**தீர்மானம் - 04/29/14**
முன்னாள் மற்றும் தற்போதய கௌரவ தவிசாளர், கௌரவ உப தவிசாளர், கௌரவ உறுப்பினர்களின் பெயர் கொண்ட பெயர்ப் பலகையை அப்துல் மஜீட் மண்டபத்தில் வைப்பதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உப தவிசாளர் | ஏ.அச்சி முஹம்மட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ்.நளீம் |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாக அனுமதிக்கப்பட்டது.

**கௌரவ உறுப்பினர் எஸ்.நளீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இந்த சபையில் 2 பிரேரணைகள் முன்வைக்கப்பட்டது. ஒன்று சென்னல் கிராமம் - 2 கிராம சேவகர் பிரிவினை 4 பிரிவுகளாக பிரிப்பதற்கு ஒரு பிரேரணை முன்வைத்திருந்தேன். அப் பிரேரணை முன்வைத்ததில் இருந்து நாட்டில் ஏற்பட்ட அனர்த்த சூழ்நிலையின் காரணமாக சகல திணைக்களங்களும் சரியான முறையில் நடைமுறைப்படுத்தப்படவில்லை. ஆனால் இன்று நாட்டின் நிலமை ஓரளவேணும் மாறியிருக்கின்றது. எனவே அதனை செய்து தரவேண்டும் என்று உங்களை மிகவும் விணயமாக கேட்டவனாக,

அத்தோடு புளக் ஜே மேற்கு 1ம் பிரிவில் உள்ள பலநோக்கு கூட்டுறவு சங்கத்திற்கு சொந்தமான காணியையும் எமது சபைக்கு பெற்றுக் கொள்வதற்கு ஒரு பிரேரணை முன்வைத்திருந்தேன். அதற்கான முன் ஏற்பாடுகள் நீங்கள் செய்திருந்தமையும் எனக்கு அறியக்கிடைத்திருந்தது. எனவே இவை இரண்டும் இச் சபையிலே ஒரு கௌரவ உறுப்பினராக இருந்ததற்கு ஒரு சான்றாக அமைய வேண்டும் என்பதற்காக செய்திருந்தேன். இன்ஷா அல்லாஹ் இன்னும் எத்தனை அமர்வுகளுக்கு நான் பிரசன்னமாகுவேன் என்று என்னால் கூற முடியாத சூழ்நிலை. எனவே இந்த சபையில் இருந்தோம் மக்களுக்காக செய்தது என்னவென்று கேட்கின்ற போது சொல்வதற்கு எதுவுமே இல்லை. இருந்தாலும் இதையாவது நாங்கள் மக்களுக்காக செய்தோம் என்று அடையாளப்படுத்த வேண்டும். மிகவும் வினயமாக கௌரவ தவிசாளர் அவர்களை வேண்டிக்கொள்கின்றேன். நான் நினைக்கின்றேன் அடுத்த அமர்வுக்கு என்னால் சமூகமளிக்க முடியுமா என்பது கேள்விக்குறி. எனவே இதனை நிறைவேற்றி தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இறைவன் நாட்டப்படி நடக்கும். முதலாவது விடயம் எமக்கு அப்பாற்பட்டது. ஆனால் நிச்சயமாக அந்த De Limitation விடயம் நாம் செய்ய இயலாது. அக் காலம் வருகின்ற போதுதான் செய்யலாம். ஆனால் சபையினால் முன்மொழியப்பட்டது என்று அந்த தகவல்களோடு நாம் உரிய இடங்களுக்கு அறிவிக்கலாம்.

பலநோக்கு கூட்டுறவு தொடர்பாக அதில் உள்ள பிரச்சினை என்னவென்றால் அரச காணி. அதை மதித்து நாம் பல நோக்கு கூட்டுறவு சங்கத்திற்கு நாம் சபையால் இதனை பாவனைக்கு அதுவும் வாடகைக்கு தாருங்கள் என்று எழுதினோம். அதற்கு இன்னும் பதில் வரவில்லை. நான் DS அவர்களை சந்தித்து கேட்டேன். இதை என்ன செய்யலாம் என்று, அவர் சொன்னார் இதில் உள்ள பிரச்சினை அவர்களின் பராமரிப்பு. அவர்களின் கட்டடம் என்ற படியினால் நாம் எடுத்தால் அவர்கள் Courts இற்கு சென்று Bus Stand இனை தடுத்தது போல் வரும். வேறு வழி இல்லையா என்று கேட்டேன். சமூக அழுத்தம் அடுத்த வழி, அப் பகுதியில் இருக்கின்ற மக்கள், கூட்டுறவு நிர்வாகத்தவர்கள், அமைப்புகள், GS மூலமாக இதை சபையின் பாராமரிப்பின் கீழ் கொடுங்கள் என்று ஒரு அழுத்தம் ஒன்றை உருவாக்கினால் அதை அவர்களுக்கு மறுபரிசீலனை செய்யலாம் என்று கூறினார். அதை செயற்படுத்த வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.நளீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இன்று அவ் இடம் மிகவும் மோசமான முறையிலும் டெங்கு மற்றும் பல்வேறுபட்ட தொற்று நோய்கள் தொற்றக் கூடிய நிலையில் இருக்கின்றது. இது தொடர்பாக சுகாதார உத்தியோகத்தர்களுக்கு ஒரு அறிவித்தலைக் கொடுத்து பொதுச் சுகாதார உத்தியோகத்தர்கள் ஊடாக அவர்களுக்கு ஒரு அழுத்தத்தை கொடுக்கலாம் என்று நினைக்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
எமது சட்டத்திலும் இடம் இருக்கின்றது. சென்ற சபையிலும் நான் சொன்னேன், அவர்களுக்கு எழுத்து மூலம் அறிவிக்க வேண்டும் என்று, ஆனால் அவர்கள் அதை துப்பரவு செய்தால் ஒன்றும் செய்ய இயலாது. சமூக அழுத்தம் மூலமாக DS இற்கு அறிவித்து அடுத்த அமர்வுக்கு இடையில் மாற்றத்தை கொண்டு வருவோம்.

**கௌரவ உறுப்பினர் ஏ.யூசுப் லெப்பை அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, எமது சக கௌரவ உறுப்பினர் சஹீல் அவர்களின் தகப்பனார் இறையடி எய்தினார். அன்னாருக்கு இச் சபை சார்பாக இறைவன் அவர்களது பிழைகளை மன்னித்து அன்னாருக்கு ஜென்னதுல் பிர்தௌஸ் எனும் சுவர்க்கத்தை வழங்க வேண்டும் என்று இப் பிரேரணையை சபை சார்பாக முன்வைக்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இது ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்படும்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம்.றியாஸ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, ஆலையடிச் சந்தையில் உள்ள CTB நிறுவனத்தை எழுப்ப வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
ஆலையடிச் சந்தையில் உள்ள பிரச்சினை எல்லோருக்கும் தெரியும். கடந்த சபையில் இருந்து ஒரு போராட்டம். அதை அகற்ற வேண்டும் என்று சபையில் தீர்மானம் எடுக்கின்றோம். ஆனால் அரசியல்வாதிகள் எல்லோரும் அதை தடுத்து, ஏனென்றால் ஊர் சொத்து சென்றுவிடும் என்று, எந்தவொரு CTB நிறுவனமும் இதனால் பிரயோசனப்படுவது என்று எழுதித் தருவதற்கு தயார் இல்லை. 4, 5 ஊழியர்களுக்காக அது இயங்குகின்றது. எவ்வளவோ செய்யக் கூடிய இடத்தை அரசியல் காரணங்களுக்காக முடக்கிக் கொண்டு இருக்கின்றோம். எத்தனையோ தடவை அறிவித்து இருக்கின்றோம். சட்ட நடவடிக்கை எடுக்கலாம் அதை ஒருவரும் தடுக்க இயலாது. ஆனால் சபை உறுதியாக இருக்க வேண்டும். உடனடியாக 12ம் மாதத்திற்கு இடையில் எழும்ப வேண்டும் என்று அறிவிப்போம்.

**கௌரவ உறுப்பினர் எஸ்எம்.எம்.முஸ்தபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, அரச காணிகள் என்ற தலைப்பின் கீழ் நாம் காணி சம்மந்தமாக விடயங்களை பரிமாரிக் கொள்வதற்கு அல்லது தீர்மானங்கள் எடுப்பதற்கு சபையினால் ஒரு குழு நியமித்து அதற்கு நாம் ஒரு குழுவிற்கு தலைமைத்துவமும் நியமித்து அந்த செயற்பாடுகள் நடைபெறுகின்றதா என்று எனக்கு தெளிவில்லாமல் இருக்கின்றது. ஆனால் கைவிடப்பட்ட நிலையில் அல்லது பராமரிப்பு இல்லாமல் இருக்கின்ற போது அல்லது அது சம்மந்தமாக கவனக் குறைவு ஏற்படுகின்ற போது அதில் கவனம் எடுக்க வேண்டியது சபையின் கடமை. நாம் அவ்வாறு எடுக்கின்ற போது காணிகளை சபையின் பராமரிப்பின் கீழ் கொண்டு வருகின்ற போது கௌரவ தவிசாளர் அவர்கள் கூறினீர்கள் விவசாய பண்ணை சம்மந்தமான எமது அம்பாரை மாவட்ட அரசாங்க அதிபர் ஒரு கலந்துரையாடல் நடைபெற்ற போது அது எவ்வாறு அமைந்து கொள்ள வேண்டும் என்று கூறினார்கள்.

தற்போது MPCS இனுடைய நிறைய காணிகள் பராமரிப்பு இல்லாமல் இருக்கின்றது. அதனை நாம் கையேற்கும் போது அதை அவர்கள் துப்பரவு செய்கின்ற நிலமை அல்லது ஏதோ ஒரு மாற்று வழியில் அதை நாம் பெற்றுக் கொள்வதை தடை செய்வதற்கான வாய்ப்புகள் இருக்கின்றது. ஆனால் அதை நாம் சமூக நலன் கொண்டு சம்மாந்துறைக்கு பஸ்தரிப்பு நிலையம் அமைப்பதற்கு வந்திருந்த 50 மில்லியன் எத்தனையோ பேரின் உழைப்பு. மொத்தம் 125 மில்லியன் அவ்வளவு பணமும் திரும்பி சென்றது என்பது இவ் ஊருக்கு இழக்கப்பட்ட பாரிய ஒரு இழப்பு. என்னுடைய சகல உரைகளிலும் அவதானித்து பார்த்திருப்பீர்கள். வட்டாரம் எல்லாவற்றுக்கும் அப்பால் இந்த சபை சம்மாந்துறை பிரதேச சபையால் அவ்வளவு நிதியும் கொண்டுவரப்பட்டது. ஒட்டுமொத்தத்தில் பார்க்கின்ற போது சம்மாந்துறை பிரதேச சபைக்குட்பட்ட மக்களுக்கு வந்த வரம் இல்லாமல் போய்விட்டது. MPCS என்ற 4 எழுத்திற்காகவேண்டி நாம் அவ் வளத்தை விட இயலாது. கௌரவ உறுப்பினர் றியாஸ் அவர்களின் வீட்டுக்கு அருகில் உள்ள காணி பராமரிப்பு இல்லாமல் இருக்கின்றது. அப்படியான காணிகளை எல்லாம் கையகப்படுத்துவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றது. அது சம்மந்தமாக ஒரு விடயம் விணயமாக கொண்டுவரப்பட வேண்டும்.

இதே போன்றுதான் உதாரணமாக Paddy Marketing காணி அது அப்படியோ கிடந்து அதன் முடிவு என்னவாகப் போகின்றது? இப்படியான சபை அமைந்திருக்கின்ற நேரத்தில் நாம் அதில் கவனம் எடுத்து சபைக்குள் கொண்டுவருகின்ற போது காலாகாலமாக அது சபையோடு இருந்து இவ் ஊர் மக்களுக்கு பயனளிப்பதாக அமையும். உதாரணமாக விளையாட்டு மண்டபத்தை கடந்த சபையில் மிக இறுக்கமாக அந்த தீர்மானத்தை எடுத்து வந்ததால் இன்று சம்மாந்துறை பிரதேச சபையால் ஆளப்படுகின்றது. இவ்வாறான அரசியலுக்கு அப்பால் எடுக்க வேண்டிய தீர்மானங்களை இந்த சபையால் கொண்டுவர முடியும் என்ற அடிப்படையில் காணிகள் சம்மந்தமாக ஒரு காத்திரமான முடிவு எடுக்கப்பட வேண்டும் என்று கௌரவ தவிசாளரை விணயமாக கேட்டுக்கொண்டு விடைபெறுகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எம்.எஸ்.சரீபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இந்த இடத்தில் இது பொருத்தமானதா? இல்லை என்று சொன்னாலும் மன்னிக்க வேண்டும். தற்போது எமது சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையில் மிகவும் நீண்ட நாட்களாக நெருக்கடி ஒன்றை எதிர்பார்த்துக் கொண்டிருந்தோம். தமிழ் தெரிந்த VOG ஒருவரைப் பற்றி, ஆனால் தற்போது தமிழ் பேசக்கூடிய ஒரு திடகாத்திரமான VOG வந்திருக்கின்றார். உண்மையிலே அவர் வந்ததைப் பற்றி அதிகமானவர்களுக்கு தெரியாது. இக் கொரோனா காலத்தில் அங்கும் இங்குமாக கற்பிணித் தாய்மார்கள் மிகவும் சிரமப்பட்டு பிரசவங்களை நடத்துவதற்கு சிரமப்பட்ட காலம். தமிழ் தெரியாத சிக்கலாலும் சிரமப்பட்டு இருக்கின்றார்கள். எனவே தற்போது தமிழ் தெரிந்த ஒரு வைத்திய நிபுணர் வந்ததையிட்டு நாம் சந்தோசப்பட வேண்டும். வெளிநாட்டில் ஒரு வைத்திய நிபுணராக வெளியாகி வந்த ஒருவர். அவர் கூறிய விடயம், இங்கு சில விடயங்களை மாற்றியமைக்க வேண்டும் என்று, இரத்தப் பரிசோதனை என்பதை வெளியில் அனுப்புவது என்றால் ஒருவருக்கு ரூபா 12500/- செலவாகின்றது. இப் பணம் என்பது மிகவும் கஸ்டமான பணம் என்று கூறினார். இதை நாம் வைத்தியசாலைக்குள் செய்வது என்றால் ரூபா 2500/- செலவளிக்க வேண்டி வரும். இதற்கான கருவியை பெற்றுக் கொள்வது என்பது ஒரு மில்லியன் பணம் தேவைப்படும் என்றார். இதை வெளியில் எல்லோரிடமும் கூறியிருந்தேன். இயலுமான அளவு சம்மாந்துறை எமது ஊர் என்ற வகையில் இதை நாம் எல்லோரும் ஒத்துழைத்து வெளியிலாவது இதை பெற்றுக் கொடுக்க வேண்டும் என்றும்,

அத்தோடு எல்லா வசதிகள் இருந்தும் அம்பாரை மட்டக்களப்பு என்று ஒரு குழந்தைக்கு திடீர் என்று ஏதாவது பாரிய இழைப்பு வரும் போது அதை Transfer செய்கின்றார்கள். அதை இங்கு செய்யலாம் என்றும் கூறினார். அதற்கான கருவியையும் பெற்றுத் தருமாறும் கேட்டுக்கொள்கின்றேன். இதை ஏன் சபையில் கூறுகின்றேன் என்றால் சபையால் செய்யாவிட்டாலும் வெளியில் கேட்கக் கூடியதாக இருக்கும். உதாரணமாக எங்களது தவிசாளர் அவர்களும் தற்போது இருக்கின்ற சுகாதார வைத்திய அமைச்சர் அவர்களுடன் நெருங்கிய ஒருவர் என்று கேள்விப்பட்டேன். நான் இதை வெளியில் சொல்வதால் நீங்களும் அப்படி ஒன்று இருக்கின்றதா? என்று கேட்டு பெற்றுக்கொள்ளலாம் என்பதற்காக கூறுகின்றேன். சம்மாந்துறை வைத்தியசாலை மிகவும் அபவிருத்தியடைந்து கொண்டிருக்கின்ற காலகட்டத்தில் நாங்கள் எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும் என்றும், VOG வந்திருப்பதனை அதிகமானவர்கள் தெரியாமல் இருக்கலாம். பள்ளிவாசலிலும் அறிவிப்பதற்கு அவர் அனுமதி தரவில்லை. ஏனைய வைத்தியர்கள் இதைப்பற்றி கோபப்படுவார்கள் என்று, எமது ஊரில் நடக்கின்ற பிரச்சினை வைத்தியர்கள் நான் VOG என்று வீட்டில் Scan செய்கின்றார்கள். அதில் நிறைய பிழைகள் வருகின்றது. எனவே இவர்தான் VOG என்பதை எங்களால் இயன்றவரை தெரியப்படுத்தி வைத்தியசாலைக்கு தங்களால் இயன்ற உதவிகளை செய்ய வேண்டும் என்று சபை ஊடாக எல்லோரிடமும் கேட்டுக்கொள்கின்றேன்.

**கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, அவ் வைத்தியர் கூறிய உபகரணத்தை வாங்கிக் கொடுப்பதற்கு உஸ்வா மௌலவி அவர்கள் முயற்சி எடுத்து பள்ளிவாசலுக்கு கடிதம் கொடுத்து அவர்கள் அத் தொகுதிக்கான பொருட்களின் விபரங்களை அவர்களிடம் கோரிய போது, முதல் அவர் இருந்த ஆர்வத்தை தற்போது குறைத்துக்கொண்டு தேவையில்லை என்று கூறினார். இது கிளினிக் சென்டர்களின் அழுத்தமாகவும் இருக்கலாம்.

காணி என்பது மிக முக்கியம் ஆகும். இங்கு சொல்லப்பட்ட காணிகள் தொடர்பாக அறிக்கைகள் அனுப்பினோமா என்று தெரியாது. ஏகமனதாக தீர்மானம் எடுத்தோம். பிரதேச சபைக்கு தெரியாமல் எந்த காணியையும் கையகற்ற முடியாது என்ற தீர்மானத்தை எடுத்துக் கொடுத்தால் பிரதேச செயலகமும், பிரதேச சபையும் சேர்ந்துதான் சம்மாந்துறைக்குள் இருக்கின்ற அனைத்து காணிகளையும் ஏனையவர்கள் எடுக்காமல் பாதுகாக்க முடியும் என்று அவர் கூறினார். அதன் அடிப்படையில் சென்ற முறை எடுத்த தீர்மானம் நான் கேட்டேன் இன்னும் வரவில்லை என்று கூறினார். கட்டாயமாக அந்த தீர்மானத்தை செயலாளர் அவர்களால் அனுப்பி வைக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

பிரதேச சபையின் ஊழியர்கள் எல்லோரும் இணைந்த சேவைக்குரியவர்கள். அவர்கள் நிரந்தரமாக பிரதேச சபையின் ஊழியர்கள் இல்லை. எல்லோருக்கும் இச் சபையில் செயற்படுவதற்கு பெரிய ஒரு கஸ்டம். சிலர் அதை சவாலாக எடுத்து ஒரு அர்ப்பணிப்போடு செய்கின்றார்கள். பலர் இதை ஒரு சுமையாக எடுக்கின்றார்கள். அர்ப்பணிப்போடு செய்கின்ற வீதம் குறைவு. அதனால்தான் பல விடயங்கள் செயலாளர் மட்டத்தில் நிற்கும். கௌரவ உறுப்பினர்கள் மன வருத்தத்துடன் தெரிவிக்கின்றேன். சென்ற முறை 2 குழு நியமித்தோம். அந்தக் குழுவின் அறிக்கைகள் என்னிடம் வரவில்லை. புத்தகம் தொடர்பாக நான் அடிப்படை வேலைகள் செய்திருக்கின்றேன். Vice Chancellor சொன்னார் இது கதை மட்டத்தில்தான் இருக்கும் நடக்க மாட்டாது என்று,

நான் அவரிடம் கூறியது என்னெவன்றால் தென்கிழக்கு பல்கலைக்கழகம் இப் பகுதிக்கு உருவானது ஒருவருக்கும் பெருமைக்காக மட்டும் இல்லையே, அப் பல்கலைக்கழகம் உருவானதால் அப் பகுதி ஒரு மாற்றமடைய வேண்டும். ஆனால் துரதிஸ்டவசமாக அப் பல்கலைக்கழகத்திற்கும் சமூகத்திற்கும் எந்தவொரு தொடர்பும் இல்லாமல் இருக்கின்றது. அந்தப் பல்கலைக்கழகத்தில் படிக்கின்ற பிள்ளைகள் அவர்களின் கல்வி நடவடிக்கைகளோடு சமூக நடவடிக்கைகளும் இல்லை. நான் அவர்களிடம் எடுத்து சொன்னேன் இப்படி இருக்கின்றது அதற்கு நாங்கள் Fund பண்ணுவதற்கு தயார் அதுமட்டுமல்ல அம்பாரை மாவட்டத்தை எழுதுவதற்கும் சபையால் Fund பண்றோம் என்று, இதை நான் மட்டும் தொடர இயலாது. அதனால் இக் குழு போட்டவுடன் அதை பாரம் எடுத்து செய்ய வேண்டும். உத்தியோகத்தர்கள் செய்வார்கள் என்று எதிர்பார்க்க இயலாது. இதை உணர்ந்து நீங்கள் பங்களிப்பு செய்ய வேண்டும். கௌரவ உறுப்பினர் முஸ்தபா அவர்கள் Vice Chancellor உடன் தொடர்பு கொண்டு அதை செய்ய வேண்டும் என்று கூறி, சபையின் அமர்வினை இனிதே முடித்துக் கொள்கின்றேன்.

A.அச்சி முஹம்மட்
உப தவிசாளர் (பதில் தவிசாளர்)
சம்மாந்துறை பிரதேச சபை

செயலாளர்
சம்மாந்துறை பிரதேச சபை

AM.முஹம்மட் நௌசாட்
தவிசாளர்
சம்மாந்துறை பிரதேச சபை.

AM.முஹம்மட் நௌசாட்
தவிசாளர்
சம்மாந்துறை பிரதேச சபை.